வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 12.07.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 218 பக்கங்கள் : 16


MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஜனாதிபதியாகிறார் ரணில் விக்கிரமசிங்க?

## மொட்டு கட்சி முழு ஆதரவு!

கொழும்பு, ஜூலை 12

**கோட்டாபய ராஜபக்ஷ நாளை பதவி விலகுவதைத் தொடர்ந்து, தற்காலிகமாக ஜனாதிபதி பதவியை ஏற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமிக்க பொதுஜன பெரமுன கட்சி ஆதரவு அளிக்கும் என்று அந்தக் கட்சியின் உச்சவட்டாரங்கள் தெரிவித்தன.**

15

# ஜனாதிபதியை தெரிவதற்கு 20ஆம் திகதி வாக்கெடுப்பு!

## சபாநாயகர் அறிவிப்பு



*கொழும்பு, ஜூலை 12*

*புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றில் வாக்கெடுப்பு இடம்பெறும். அரசமைப்பு விதிகளின் படி கட்சித் தலைவர்கள் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.*

*நேற்று ஊடகங்களிடம் பேசிய அவர், “அரசமைப்பின் படி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை*

15

# சர்வகட்சி அரசாங்கம் அமைக்க கட்சித் தலைவர்கள் இணக்கம்!

கொழும்பு, ஜூலை 12

**இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும், ஜனாதிபதி, பிரதமருக்கு ஆலோசனைகளை வழங்க தேசிய பேரவை ஒன்றை நிறுவி இதில், அனைத்து கட்சிகளின் தலைவர்களும் இணைவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

*பாராளுமன்றத்தில் சபாநாயகர் தலைமையில் நேற்றுக் கூடிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் இந்தத் தீர்மானத்தை எடுத்தனர் என்று அறிய வருகின்றது.*

*இந்தக் கூட்டத்தில், கட்சிகளின் தலைவர்கள் தமது நிலைப்பாடுகளை முன்வைத்தனர்.*

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக ஆதரவு வழங்க வேண்டும், ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது அதிகூடிய வாக்குகளை பெற்றவரும் அவரே என்ற கருத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்*

15

# முப்படை தளபதிகளை சந்தித்தார் ஜனாதிபதி!

- கப்பலிலேயே பதுங்கினாராம்
- இவ்வாரம் வெளிநாடு பறப்பார்?

*கொழும்பு, ஜூலை 12*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிலேயே தங்கியிருந்தார். அவர் நேற்றுக் காலை முப்படை தளபதிகளை சந்தித்துப் பேச்சு நடத்தி*

15

# 13 ஆம் திகதியே பதவி விலகுவேன்

## பிரதமருக்கு அறிவித்தார் கோட்டாபய

*கொழும்பு, ஜூலை. 12*

*ஏற்கனவே அறித்தவாறு வரும் ஜூலை 13ஆம் திகதியே தான் பதவி விலக உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.*

*பிரதமர் ஊடகப்பிரிவு இத்தகவலை வெளியிட்டுள்ளது.*

15

# 13ஆம் திகதி கோட்டாபய பதவி விலக காரணம் என்ன?

*கொழும்பு, ஜூலை 12*

*ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ நாளை - 13ஆம் திகதி விலகவுள்ளார். விலகலுக்காக அவர் 13ஆம் திகதியை தெரிவு செய்தமை ஏன் என்று கொழும்பு அரசியலின் உச்சபுள்ளிகள் சிலர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.*

*நாளை புதன்கிழமை போயா விடுமுறை நாள் என்பதால் பாராளுமன்றத்தை கூட்ட*

15

# கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு போகவில்லை!

## ‘பல்டி’ அடித்தார் சபாநாயகர்

*கொழும்பு, ஜூலை 12*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு ஒன்றுக்கு சென்றுவிட்டார் என்று சர்வதேச ஊடகமான பி. பி. சிக்கு தெரிவித்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்த்தன, சில மணி நேரங்*

15

# அடுத்த ஜனாதிபதியாக சஜித்; ஐ. ம. ச. ஏகமனதாக தீர்மானம்

*கொழும்பு, ஜூலை. 12*

*அடுத்த ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நியமிக்கும் தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஏகமனதாக அங்கீகரித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.*

*இது தொடர்பான தீர்மானம் கட்சியின்*

15

# அம்புலன்ஸ் சேவை இடைநிறுத்தம்

*கொழும்பு, ஜூலை 12*

*“1990“ என்ற “சுவ செரிய“ அம்புலன்ஸ் சேவை 14 மாவட்டங்களில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*நேற்று முன்தினம் மாலை 4 மணி முதல் இந்த சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரண*

15

# நாட்டை மீட்டெடுக்க 4 வருடங்கள் தேவை

## நாணய நிதியம் கூறியதென பிரதமர் ரணில் தகவல்



*கொழும்பு, ஜூலை. 12*

*தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நான்கு ஆண்டுகள் தேவைப்படும் என சர்வதேச நாயண நிதியம் தெரிவித்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.*

*இலங்கையின் பொருளாதாரத்தை*

15

## இப்படியும் நடக்கிறது...!

'குலநாச பலன் முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம்!' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் இந்த ஊர்க்குருவிக்கு கிடைத்தது. திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறவிருந்த கும்பாபிஷேகம் பற்றிய துண்டுப்பிரசுரம் அது.

நாட்டில் பிரிவு, நாட்டுக்குச் சுதந்திரம் போன்றவற்றை வழங்குபவர் கேது பகவான்.

நாற்பத்தியெட்டில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த போது துலா ராசியில் கேது பகவான் சஞ்சரித்தார். துலா ராசியிலே அவர் தற்போதும் சஞ்சாரம் செய்கிறார். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாற்பத்தியெட்டாம் ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதியில் சஞ்சரித்த பாகையில் இந்த ஆண்டு ஆடி மாத ஆரம்பத்தில் சஞ்சரிப்பார். இக்காலத்தில் இலங்கையில் பெரிய மாற்றங்கள் நிகழ வாய்ப்புள்ளது. பசி, பஞ்சம், பட்டினி, பொருளாதாரப் பிரச்னை, திவால் நிலையில் நாடு, இனப் பிரச்சனைக்குத் தீர்வு இல்லை! கடவுளின் அனுக்கிரகம் வேண்டிய இத் தருணத்தில், எரியும் தீயில் பெற்றோல் ஊற்றுவது போன்று, குலநாச பலன் முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்யலாமா?

இப்படிக் கேள்வி எழுப்பியிருந்தது அந்தத் துண்டு பிரசுரம்.

படித்துப் பார்த்ததும் அதிலிருந்த தகவல்கள் குறித்து அறிந்துகொள்வதற்காக 'செந்தமிழ் சொல்லருவி' லலீசன் அவர்களுக்கு அனுப்பி, என்ன இது அச்சுறுத்துகின்றது என்று கேட்டிருந்தேன்.

சில நிமிடங்களிலேயே அவரிடமிருந்து பதில் வந்தது.

இரண்டு பஞ்சாங்கங்கள் புழக்கத்தில் இருக்கின்றன. திருக்கணித பஞ்சாங்கப்படி அன்றைய தினம் கும்பாபிஷேகத்திற்கு உரிய நாள் இல்லை என்று எழுதியவர் கனடாவில் இருக்கிறார். அவர் திருக்கணித விற்பன்னர். ஆனால், புதன்கிழமை சிவனுக்குரிய நாள். அதனால் கும்பாபிஷேகம் வைக்கின்றனர் என்று பதில் தந்ததோடு நிற்கவில்லை.

அந்த கும்பாபிஷேகத்தை நெறிப்படுத்துவதற்காக தமிழகத்திலிருந்து வருகைதரவுள்ள குருக்களையும் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டிருக்கிறார்.

தவறான புரிதலினால் இப்படி எழுதப்பட்டுள்ளது என்றும், இது சம்பந்தமாக தகுந்த புரிதலுடன் கூடிய விளக்கத்தை நேரில் வருகின்றபோது வழங்க தான் தயாராக இருப்பதாவும் இந்த குருக்கள் தெரிவித்ததாகவும் லலீசன் தெரிவித்திருந்தார்.

அத்தோடு அந்த விடயத்தை மறந்தும் விட்டேன்.

ஆனால் நேற்றைய தினம், லலீசனிடமிருந்து ஒரு செய்தி. கும்பாபிஷேக முகூர்த்தம் குலநாசம் என்பது உண்மைபோல இருக்கின்றதே என்று கேள்வி எழுப்பியிருந்த அவர், அரசன் (கோட்டா) குலநாசம் தானே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

சைவர்கள் எப்போதும் தமது பண்டிகைகளை கொண்டாடுகின்றபோது இதுபோன்ற குழப்பங்கள் ஏற்பட்டு வருவது அண்மைக்காலமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றது.

சைவர்கள் இரண்டு பஞ்சாங்கங்களை பயன்படுத்தி வருகின்றனர். திருக்கணித பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்பவை அவை. இலங்கைச் சைவர்கள் எப்போதும் வாக்கிய பஞ்சாங்கத்தையே அதிகம் பயன்படுத்துவதுண்டு. ஆனால் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில், திருக்கணித பஞ்சாங்கத்தையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். இலங்கையிலும் ஒருசிலர் அதனை பயன்படுத்துவதுண்டு.

சைவர்களின் எந்த பண்டிகை என்றாலும் அது புதுவருடப்பிறப்பு, தைப்பொங்கல் என்றாலும், இரண்டு பஞ்சாங்கங்களும் வெவ்வேறு நேரத்தை குறித்து வைத்திருக்கின்றன.

இந்தக் குழப்பம் அண்மைக்காலத்தில் அதிகமாக காணப்படுகின்றது. ஆனாலும், நாம் ஒரு பஞ்சாங்கத்தை பின்பற்றினாலும் மற்றையது தவறான நேரம் என்று குறிப்பிடும் நேரத்தை தவிர்க்க முடியாதா என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

இந்த கும்பாபிஷேகத்தால் குலநாசம் (அரசனுக்கு) ஏற்பட்டிருப்பது கவலைக்குரியதல்லதான். ஆனாலும், இதுபோன்ற முரண்பாடுகள் ஏற்படாமல் தவிர்ப்பது நல்லது என்றே தோன்றுகின்றது.

அல்லது குலநாசம் ஏற்படவேண்டும் என்பதற்காகவே இப்படிச் செய்தார்கள் என்று யாரும் சொல்லாமல் இருந்தால் சரி!

- ஊர்க்குருவி

# கோட்டாபய பதவி விலகினால் 20ஆம் திகதி ஜனாதிபதி தெரிவு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



**கொழும்பு, ஜுலை 12**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை - 13ஆம் திகதி பதவி விலகினால், எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

இந்நிலையில், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் ஜனாதிபதி நாளை பதவி விலகினால் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறும்.

இதன்படி, பாராளுமன்றம் வரும் 15 ஆம் திகதி கூடவுள்ளது. ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு, எதிர்வரும் 20 ஆம் திகதி ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார் - என்றார். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுலை 12

இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சி தொடர்பாக உரையாடும் 'நாட்டின் இன்றைய போக்கும் நமக்கு முன்னுள்ள பொறுப்பும்' என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பி. ப. 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

பகிரங்க கலந்துரையாடலாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் துறைசார் கருத்துரைகளும் கலந்துரையாடலும் இடம்பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

## நேர்முக வர்ணனை!

யாழ்ப்பாணம், ஜுலை 12

தென்மராட்சி - கைதடி கயிற்றசிட்டி முருகன் ஆலய வருடாந்த தேர் உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் நேர்முக வர்ணனை இடம்பெறவுள்ளது.

ஆலயத்தில் இன்று காலை 8.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில், சைவப்புலவர் செ.த.குமரன் வர்ணனையை வழங்கவுள்ளார். (ஐ)

# ஆட்சியை ஒப்படைத்தால் பொறுப்பேற்க நாம் தயார்

கொழும்பு, ஜுலை 12

இந்த நேரத்தில் நாட்டின் அரசாங்கத்தை ஒப்படைத்தால் பொறுப்பேற்கத் தயார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

மேலும், 'நாங்கள் பொறுப்பை ஏற்கத் தயாராக உள்ளவர்கள், பயந்து எதையும் விட்டுவிடாதவர்கள்' என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், பாராளுமன்றத்தில் மூன்று பிரதிநிதிகள் மட்டுமே இருப்பதால், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்பான வாக்கெடுப்பு நடந்தால், வேறு யாராவது ஜனாதிபதி மற்றும் பிரதமராக வர வாய்ப்பு உள்ளது.

மக்களின் விருப்பத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் முரண்பாடு உருவாக்கப்பட்டுள்ளதால், மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் பாராளுமன்றம் உருவாக்கப்படவேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# கோட்டாபயவுக்கு முன்பு ரணில் பதவி விலகாவிடின் பேராபத்து!

## இப்படி எச்சரிக்கிறார் சட்டத்தரணி சில்வா



கொழும்பு, ஜுலை 12

ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகினால், அதற்கு முன்னதாக ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், கோட்டா பதவி விலகும் நேரத்தில் பிரதமர் பதவியில் இருந்து ரணில் வெளியேறாது விட்டால், அரசியலமைப்பு ரீதியாக அவர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார்.

ஆகவே, ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். இல்லையெனில், தற்போதைய நெருக்கடி மேலும் குழப்பத்தை ஏற்படுத்தும் என்று அவர் எச்சரித்துள்ளார். (ஐ-சி)

# போராட்டத்தில் ஈடுபட்ட எவர்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டாம்!

## சிவில் ஆர்வலர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 12

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட எந்தவொரு பிரஜைக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என போராட்டத்தில் ஈடுபட்ட சிவில் ஆர்வலர்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் ஆர்வலர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் பொதுமக்களின் எழுச்சி என்றும் இதற்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிவில் ஆர்வலர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

கடந்த 9ஆம் திகதி தேவையின்றி பலரின் உரிமைகள் மீறப்பட்டன என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் சார்பில் கலந்து கொண்ட சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, கடந்த 9ஆம் திகதி மக்கள் போராட்டத்தின் போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.07.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆணி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அடுத்த ஜனாதிபதி ?

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகலை அறிவித்திருக்கும் நிலையில், இனி அடுத்ததாக நடக்கப்போகும் விடயங்களே, நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றன. ஏனெனில், இன்றைய நிலையில் இலங்கையில் அரசாங்கம் இல்லை. முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவை யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன - சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது யார் என்னும் கேள்வியுடன்தான், நாட்டின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், கோட்டாபயவின் பதவி விலகலைத் தொடர்ந்து அடுத்த ஜனாதிபதியாக பொறுப்பேற்கப் போவது யார் என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. ராஜபக்ஷக்களுக்கு ஆதரவானவர்கள் எவருமே மக்கள் முன்னால் தோன்றமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் பதவி விலகவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், அரசியலமைப்பின்படி பிரதமராக இருப்பரே தற்காலிக ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பார். ரணிலையும் வெளியேறுமாறே போராட்டக்காரர்கள் கூறிவருகின்றனர். ஒருவேளை, ரணில் தற்காலிக ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றால் மீளவும் வன்முறைகள் வெடிப்பதற்கான வாய்ப்புக்களும் உண்டு. அதேவேளை, ஜனாதிபதி மாளிகை, போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் விடயம் சாதாரணமான ஒன்றல்ல.

வழமையாக சர்வாதிகார ஆட்சிகள் இடம்பெறும் நாடுகளில், சர்வாதிகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும்போதுதான், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதுண்டு. இலங்கை தொடர்பான சர்வதேச பார்வையும் அப்படியான ஒன்றாகவே மாறியிருக்கின்றது. மக்கள் சர்வாதிகார ஆட்சியாளர்களை விரட்டியடித்தனர் என்றவாறே வெளியுலகில் இலங்கை நிலைமைகள் சித்தரிக்கப்படுகின்றன. இந்த நிலையில் மனிதாபிமான உதவிகளை தவிர, வேறு எந்தவோர் அபிவிருத்தி திட்டங்களுக்கான உதவிகளும் இலங்கைக்குக் கிடைக்கப் போவதில்லை. இந்தியாவிலிருந்து வரும் உதவிகள் நிறுத்தப்பட்டால் நாடு ஒருநாளிலேயே கையறுநிலைக்கு சென்றுவிடும்.

இவ்வாறானதொரு நிலையில் அடுத்த ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நிர்வாகத்தில்தான், நாட்டின் அடுத்த கட்டம் தீர்மானிக்கப்படும். போராட்டக்காரர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் பிரதான இலக்கு ராஜபக்ஷ குடும்பத்தை அதிகாரத்திலிருந்து அகற்றுவதுதான். பெருமளவுக்கு அது நடந்துவிட்டது. ரணிலின் மீதான எதிர்ப்பும், ராஜபக்ஷ எதிர்ப்பின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது. இந்த நிலையில் ரணில் பதவியில் தொடர்ந்தால் சிலவேளைகளில் நிலைமைகள் சிக்கலடையலாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்பது ரணில் விக்கிரமசிங்கவின் நிறைவேறாத ஆசை. ஆனால், இப்போது அந்தக் கதிரை ரணிலுக்கு தொட்டுவிடும் தூரத்தில்தான் இருக்கின்றது. ஆனால், அவரால் தொட முடியுமா என்பதுதான் கேள்வி. தொட்டுவிட முடியுமென்றால் ரணில் நிச்சயம் அதனைத் தொடவே முற்படுவார்.

அடுத்த பிரச்னை. ரணிலும் பதவி விலகினால், அடுத்தது யாரென்னும் கேள்வியுண்டு. தற்போதைய சூழலில் பலரும் பதவியைப் பெறுவதற்கு ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றனர். காரணம், நிலைமை சிக்கலடைந்துவிட்டது. பொறுப்புக்களை எடுத்தபின்னர், நிலைமைகளை சரிசெய்ய முடியாது போனால் என்ன செய்வதென்னும் அச்சம் பலருக்குண்டு.

இதேவேளை இன்னொரு பாரிய பிரச்னையும் உண்டு. அதுதான் அனைத்து பிரச்னைகளை விடவும் பாரதூரமானது. போராட்டங்களில் ஈடுபடும் தரப்புக்கள் பலமடைந்துவிட்டன. இவ்வாறானதொரு சூழல் இதற்கு முன்னர் இருந்ததில்லை. எனவே, மீளவும் ஆட்சியாளர்களால் நிலைமைகளை சமாளிக்க முடியாது போனால், போராட்டங்களை முன்னெடுக்கக்கூடிய சூழல் பலமாக இருக்கின்றது. இந்த நிலையில், யார் நாட்டை பொறுப்பேற்க முன்வரப் போகின்றார் - இந்தக் கேள்வியுடன்தான் நாட்கள் நகர்கின்றன. நிச்சயம் நாட்டை பொறுப்பேற்க முன்வருபவர்களுக்கு பலமான வெளித்தரப்புக்களின் ஆதரவு தேவை. அப்படியிருந்தால் மட்டும்தான் அவர்களால் நிலைமைகளை சமாளிக்க முடியும்.

# பிரான்ஸின் பாஸ்டில் கோட்டை ஊடறுப்பை நினைவுபடுத்திய கொழும்பு மக்கள் எழுச்சி!

- அலசுவது இராஜதந்திரி -

*1789ஆம் ஆண்டு பிரான்ஸில் இடம்பெற்ற பிரெஞ்சு புரட்சியின் சாயலை ஒத்ததாக கொழும்பில் கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவங்கள் விளங்கியிருந்தன.*

*பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 233 ஆண்டுகளுக்கு முன்னர் பாஸ்டில் கோட்டை அராஜகத்தின் கேந்திரப்பகுதியாக விளங்கியிருந்தது. பிரான்ஸ் இராச்சியத்தின் அடித்தளமாக இருந்ததே பாஸ்டில் கோட்டை. இதன் ஒரு பகுதி சிறைச்சாலையாகவும் இருந்தது. இங்கே ஆயுதக்களஞ்சியம், திறைசேரி, ஆளணிகள், உட்பட அராஜகத்தை பிரதிபலிக்கும் அனைத்துமே காணப்பட்டிருந்தன.*

*இருந்தபோதிலும் மக்களின் புரட்சிக்கு முன்பாக சர்வாதிகாரப்போக்கு ஒருபோதும் நிலைபெற முடியாது என்பதைக் குறிப்பதைப் போலவே பிரெஞ்சுப் புரட்சியின் முக்கிய பாகமாக விளங்கிய பாஸ்டில் கோட்டையை கைப்பற்றும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. அந்தச் சம்பவம்கூட ஜூலை மாதத்திலேயே நிகழ்ந்திருந்தது.*

*பிரெஞ்சு சக்கரவர்த்தி பதினாறாவது லூயி மன்னரின் காலத்தில் நிலவிய அதீத வரிச்சுமை, விவசாயிகள் எதிர் நோக்கிய கஷ்ட, நஷ்டங்கள், உணவுப்பஞ்சம் என்பவையே பிரெஞ்சு புரட்சி ஏற்பட மூலகாரணமாக அமைந்திருந்தது.*

*இந்நிலையில் ஏறத்தாழ பிரான்ஸில் 1789ஆம் ஆண்டுகளில் நிலவிய பொருளாதார கஷ்டங்களை போன்ற நிலைமையே இலங்கையிலும் தலைகாட்ட ஆரம்பித்ததையடுத்து கொழும்பில் மக்கள் எழுச்சி விரிவான முறையில் இடம்பெற்று நாளைய தினம் (13) கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.*

*கடந்த இரு தினங்களாக கோட்டா கோ கமவில் அமைதி வழியில் ஆர்ப்பாட்டங்களை நடத்திய இளைஞர், யுவதிகள் தற்போது ஜனாதிபதி மாளிகைக்குள் வாசஞ் செய்ய ஆரம்பித்துள்ளனர். அத்துடன், அவர்கள் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து ராஜிநாமா செய்யவுள்ளமையை அறிவித்திருந்தாலும் அவர் முழுமையாக அந்தப் பதவியிலிருந்து விலகும் வரை தாம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து அகலப்போவதில்லை என்று அறிவித்துள்ளனர்.*

*இதேவேளை அடுத்த கட்டமாக இலங்கையின் அரசியல் எத்திசையில் நகரப் போகின்றதென்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகும் பட்சத்தில் பாராளுமன்ற சபாநாயகரே ஜனாதிபதி பதவிக்கு தகுதியுடையவராகின்றார்.*

*இந்நிலையில், நாளைய தினம் ஜனாதிபதி பதவி விலகும் பட்சத்தில் சபாநாயகர் ஜனாதிபதியாக பதவி ஏற்கும் சந்தர்ப்பங்களே பலமாக இருக்கின்றன.*

*கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தினுள் தற்போது தங்கியிருந்து வரும் கோ கோட்டா ஹோம் ஆர்ப்பாட்டக்காரர்கள்*



*கோட்டாபய ராஜபக்ஷவின் படுக்கையறை உட்பட அவரின் உபயோகத்திலிருந்த அனைத்து பாவனைப் பொருட்களையும் சாவகாசமாக பாவித்து வருகின்றனர். அத்துடன், ஜனாதிபதி மாளிகைக்குள்ளிருந்து எவ்வாறு பணிப்புரைகளை விடுவாரோ அதே போல ஆர்ப்பாட்டக்காரர்களும் பாசாங்கு செய்து வருகின்றனர்.*

*கொழும்பில் தற்போது இடம்பெற்று வரும் அரசியல் நிலைமைகளை நோக்கும் போது ஒரு முழுமையான அரசியலமைப்பு மாற்றம் மற்றும் பொருளாதார சீர்திருத்தம் என்பவையே அவசர தேவைகளாக இருக்கின்றன. குறிப்பாக பொருளாதார பிரச்னையே தற்போதைய அனர்த்தத்துக்கு வழியமைத்த நிலையில் மக்கள் இனிமேலும் ஒரு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்க முன்வர மாட்டர்கள் என்ற செய்தியையே கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் வழங்கியிருந்தன.*

*இலங்கையில் மட்டுமல்ல, அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸில் உள்ள கோட்டாபய ராஜபக்ஷவின் புதல்வன் மனோஜ் ராஜபக்ஷவின் இல்லமும் அங்குள்ள இலங்கையர்களால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அத்துடன், மனோஜின் இல்லம் முன்பாக திரண்டுள்ளவர்கள் அவரின் தந்தையார் மற்றும் உறவினர்களுக்கு எதிராகக் குரலெழுப்பி வருகின்றனர்.*

*அமெரிக்காவில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தினரின் சொத்துக்கள் இலங்கையில் முறைகேடாக பெறப்பட்டவை என்றே லொஸ்ஏஞ்சல்ஸ் ஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கமிடுகின்றனர். அத்துடன், வீதியில் போவோர் வருவோரிடம் கோட்டாபய ராஜபக்ஷ ஒரு கொள்ளைக்காரன் எனவும் கூறிவருகின்றனர்.*

*இதேவேளை பிரித்தானிய பிரதமராக இருந்த பொறிஸ் ஜோன்ஸன் கடந்த 8ஆம் திகதி தமது பதவியை ராஜிநாமா செய்திருந்தார். கோவிட் -19 காலத்தில் நாடு முடக்கப்பட்டபோது தனது வீட்டில் கோவிட் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி விருந்து வைத்தார் என்பதே பொறிஸ் ஜோன்ஸன் மீதான குற்றச்சாட்டு.*

*எனவே, பொறிஸ் ஜோன்சனைப்போல கோட்டாபய ராஜபக்ஷவும் தமது பதவியை ராஜநாமா செய்திருந்தால் மரியாதையாக மக்களிடமிருந்து விடைபெற்றிருக்க முடியும். ஆனால், அவ்வாறில்லாமல் முரண்டு பிடிக்க முற்பட்டு தற்போது அஞ்சாத வாசம் மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜூலை - 12 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 28
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். பணிபுரியும் இடத்தில் மற்றவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. எதிர்பார்த்த செயலில் இழுபறியாகும். தொழிலில் சிலர் சங்கடத்தை அடைவீர்கள்.

**இடபம்**
புதிய வேலையை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வீடு தேடி வரும். உற்சாகத்துடன் செயல்பட்டுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும்.

**மிதுனம்**
உடல் நிலையில் இருந்து வந்த உபாதை விலகும். உற்சாகமான நாள். எதிரிகளால் உண்டான பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்**
வியாபாரத்தில் புதிய அணுகுமுறையை கையாளுவீர்கள். லாபம் காண்பீர்கள். குடும்ப பெரியவர்களின் ஆலோசனையை கேட்பீர்கள். செயலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். திட்டமிட்டு செயல்பட்டு ஒரு செயலில் லாபம் காண்பீர்கள். உங்கள் செயலை மற்றவர்கள் பாராட்டுவார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி**
நேற்றை முயற்சி ஒன்றில் இன்று அனுகூலம், ஆதாயம் உண்டாகும். பணிபுரியும் இடத்தில் உங்கள் ஆலோசனை ஏற்கப்படும். உயர் அதிகாரி பாராட்டுவார். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்**
உங்கள் முயற்சிக்கு தடையாக இருந்தவர் விலகிச் செல்வர். நன்மையான நாள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
திடீர் பயணம் ஏற்படும். அலைச்சல் உண்டானாலும் லாபம் காண்பீர்கள். தொழில் குறித்த ரகசியங்களை யாருக்கும் தெரிவிக்க வேண்டாம். எச்சரிக்கை அவசியம். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**தனுசு**
வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். கவனமாக செயல்பட்டு ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். திடீர் செலவுகள் ஏற்படும்.

**மகரம்**
திட்டமிட்ட செயல் எளிதில் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும் மேலதிகாரிகளின் ஆதரவுடன் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்**
நேற்று வரை நிறைவேறாமல் இருந்த ஒரு செயல் இன்று நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி பலித்தமாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட மந்த நிலையை சரி செய்வீர்கள்.

**மீனம்**
எதிர்பார்த்த செய்தி உங்களைத் தேடிவரும். கொடுக்கல் வாங்கலில் லாபம் உண்டாகும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மேலதிகாரி பாராட்டுவார்கள். திருமண வயதினருக்கு பொருத்தமான வரன் அமையும்.

# இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவானார்!

சென்னை, ஜூலை 12

அ. தி. மு. கவின் இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி கே. பழனிசாமி பொதுக்குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அ. தி. மு. கவின் பொதுக் குழு கூட்டத்துக்குத் தடை விதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், சென்னை உயர்நீதிமன்றமும் பொதுக்குழுவை கட்சி விதிகளுக்கு உட்பட்டு நடத்த அனுமதி அளித்தது.

இதையடுத்து சென்னை வானகரம் ஸ்ரீவாரு மண்டபத்தில் அ. தி. மு. க. பொதுக் குழு நேற்று திங்கட்கிழமை காலை 9.15 தொடங்கியது.



பொதுக்குழுவில் அ. தி. மு. கவின் இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி கே. பழனிசாமி தெரிவு செய்யப்பட்டார்.

அ. தி. மு. கவில் பொதுச்செயலாளர் பதவியை உருவாக்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிரந்த பொதுச்செயலாளரை தேர்வு செய்வதற்கான தேர்தல் அடுத்த 4 மாதங்களுக்கு நடத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# அ. தி. மு. க. தலைமை பணிமனையை கைப்பற்றிய பன்னீர் ஆதரவாளர்கள்!

சென்னை, ஜூலை 12

அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தை கைப்பற்றிய நிலையில், ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்து சென்னை வானகரம்ஸ்ரீவாரு மண்டபத்தில் அ.தி.மு.க. பொதுக் குழு நேற்று திங்கட்கிழமை நடந்தது.

இந்நிலையில், பொதுக் குழுவை புறக்கணித்து அ. தி. மு. க. கட்சித் தலைமை அலுவலகத்துக்கு வந்தார். அங்கு பூட்டப்பட்டிருந்த கதவை உடைத்த ஓ. பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் அவரை உள்ளே அழைத்துச் சென்றனர்.

அப்போது, அங்கிருந்த பழனிசாமி ஆதரவாளர்களும், பன்னீர்செல்வம் ஆதரவாளர்களும் மோதிக் கொண்டதில் 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அ. தி. மு. க. ஆதரவாளர்களின் வாகனங்கள், பொதுமக்களின் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், தலைமை அலுவலகம் முழுவதுமாக ஓ. பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும், சில மணி நேரத்தின் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறி. போராட்டத்தில் ஈடுபட்டார். (அ)

# அ. தி. மு. க. கட்சியிலிருந்து பன்னீர்செல்வம் நீக்கப்பட்டார்!

சென்னை, ஜூலை 12

சென்னை வானகரத்தில் நேற்று நடந்த அ. தி. மு. க. பொதுக்குழுவில், ஓ. பன்னீர் செல்வத்தை கட்சியிலிருந்து நீக்கி சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சியின் பொதுக்குழுவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த பொருளாளர் ஓ. பன்னீர்செல்வத்தின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் பொதுக்குழுவில் பேசிய நத்தம் விஸ்வநாதன் கூறினார்.

மேலும், ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அவரின் ஆதரவாளர்கள் அனைவரையும் அ. தி. மு. கவிலிருந்து நீக்க சிறப்புத் தீர்மானம் கொண்டு வரப்படுவதாகவும் அறிவித்தார்.

கட்சி விதிகள் மற்றும் கோட்பாடுகளுக்கு எதிராக செயல்பட்ட ஓ. பன்னீர்செல்வம் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் நத்தம் விஸ்வநாதன் கொண்டு வந்த சிறப்பு தீர்மானம் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

ஓ. பன்னீர்செல்வம் தி. மு. கவுடன் நட்பு பாராட்டியது மற்றும் ஆட்சியைப் பாராட்டியது அனைத்தும் கட்சியின் விதிகளுக்கு முரணானது. பொருளாளர், அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் ஓ. பன்னீர்செல்வம் நீக்கப்படுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஓ. பன்னீர்செல்வத்துடன் வைத்திலிங்கம், ஜெசிடி பிரபாகர், மனோஜ் பாண்டியன் ஆகியோரையும் அதிமுகவிலிருந்து நீக்கி சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# அ. தி. மு. க. தலைமை பணிமனைக்கு 'சீல்'

சென்னை, ஜூலை 12

அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் ஓ. பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்கள் மோதிக் கொண்ட நிலையில், வருவாய்த் துறையினர் சீல் வைத்தனர்.

கட்சியின் பொதுக் குழு கூட்டம் நேற்று நடந்தது. பொதுக்குழுவை புறக்கணித்து அ. தி. மு. கவின் பன்னீர்செல்வம் நேற்று கட்சித் தலைமை அலுவலகத்துக்கு சென்றார்.

இதன்போது, தலைமை அலுவலகத்தில் இருந்த பன்னீர்செல்வம், பழனிசாமி ஆதரவாளர்கள் மோதினர். இதன்போது 10இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. இந்நிலையில், பன்னீர் செல்வம் தலைமை அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்தார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

மேலும், அலுவலகத்திலிருந்து முக்கிய ஆவணங்கள் ஓபிஎஸ் ஆதரவாளர்கள் எடுத்துச் செல்வதாகவும் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.



இதற்கிடையே, கட்சி அலுவலகத்திற்குள் செல்ல இருக்கும் உரிமை குறித்து ஓபிஎஸ் தரப்பினரும் காவல்துறையினரிடம் விளக்கமளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, சட்டம் - ஒழுங்கு பிரச்னையை கட்டுக்குள் கொண்டுவருவது குறித்தும், அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதன்படி, தலைமை அலுவலகம் தற்காலிகமாக மூடி சீல் வைக்கப்பட்டது.

# பெற்றோல், டீசலுக்கு பணம் செலுத்தப்பட்டது

எதிர்வரும் 15 முதல் 17 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வரவுள்ள டீசல் தொகைக்கான முழுப் பணமும் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ருவிட்டர் கணக்கில் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன் 22-24 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப்பகுதியில் வரவுள்ள பெற்றோலுக்கான முழுப் பணமும் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை 15-17 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப் பகுதியில் வரவுள்ள டீசல் கப்பல் மற்றும் 17-19 ஆம் திகதிகளுக்கு உட்பட்ட காலப் பகுதியில் வரவுள்ள பெற்றோல் கப்பலுக்கான முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# தென்மராட்சியில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், ஜுலை. 12

தென்மராட்சியின் அல்லாரை,கைதடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்கள் இருவருக்கும் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் அல்லாரை அறுகம்புலம் மகா கணபதி பிள்ளையார் ஆலயத்தின் தலைவர் என்று தெரியவந்துள்ளது. குறித்த ஆலயத்தில் வருடாந்த திருவிழா நடைபெற்றுவரும் நிலையில் இன்று அங்கு தேர்த்திருவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிலையில் இது குறித்து சாவகச்சேரி சுகாதாரத் தரப்பினர் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அதில்,

நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் எமது பிரதேசங்களில் கொரோனா பரவல் ஆரம்பித்துள்ளமை பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளதால் அதன் பரவலை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சினால் கடந்த காலங்களில் பரிந்துரைக்கப்பட்டிருந்த சுகாதார வழிமுறைகளை, உங்களது நன்மைகருதி மீளவும் பின்பற்றுமாறு அறுவுறுத்தப்படுகிறது. (அ)

# தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தயார்

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஜுலை.12

**"ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட "மொட்டு" அரசின் மக்கள் ஆணை முடிந்துவிட்டது. அவர்கள் இந்த அழகான தீவை அழித்தனர். இவ்வாறு அழிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் நாங்கள் தயார்."**



- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேற்று விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை ஸ்திரப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்குப் பங்களிக்கவும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அரசை நியமிப்பதற்கு நாம் தயார்.

இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக யாராவது நாடாளுமன்றத்தில் சதிகளை மேற்கொண்டால் அது தேசத்துரோக செயலாகும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் எமக்கு ஒத்துழைக்குமாறு அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்-என்றார். (அ)

# ஜுலை 9 ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்த பொலிஸ் அதிகாரி ஆயுதத்துடன் கைது!

கொழும்பு, ஜுலை. 12

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்திற்கு ஆதரவாக ஹைலெவல் வீதியால் வந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவாக மஹரகம நகருக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று அதிகாலை கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் கூரிய ஆயுதத்துடன் நுழைய முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பொலிஸ் போக்குவரத்து பிரிவிற்குட்பட்ட தொழில்நுட்ப பொலிஸ் சார்ஜன்ட் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

# ஊடகவியலாளர்களைத் தாக்கிய படை அதிகாரி பணியிடை நீக்கம்

கொழும்பு, ஜுலை. 12

கடந்த 9ஆம் திகதி பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு வெளியே ஏற்பட்ட அமைதியின்மையின் போது ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய சிறப்பு அதிரடிப் படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததற்காக பொதுச் சேவை ஆணைக்குழு அங்கீகாரத்தின் கீழ் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் அதிபர், லியனகேவை பணி இடைநிறுத்தம் செய்துள்ளார். (அ)

# புஸல்லாவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலி பஸ் தீக்கிரை!

கொழும்பு, ஜுலை. 12



புஸல்லாவை, காச்சாமலை வீடன் பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர். மேலும் சிலர் காயமடைந்துள்ளனர். ஆத்திரமடைந்த மக்கள் பஸ்ஸையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

புஸ்ஸலாவை, பெரட்டாசி தோட்டத்திலிருந்து, புஸ்ஸலாவை நகரத்துக்குப் பயணிகளை ஏற்றி சென்ற பஸ்ஸே வீடன் பகுதியில் வைத்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மிதிபலகையில் பயணித்த இருவரே, பஸ் மண் திட்டில் சாய்ந்ததால், அதில் சிக்குண்டு பலியாகியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் பெரட்டாசி தோட்டத்தில் வசிக்கும் சுரேன்ஜித் புஷ்பகுமார் (வயது 39) மற்றும் ஹெல்போட 7ஆம் கட்டை தோட்டத்தில் வசிக்கும் விஜயகுமார் கவிஷ்கர் (வயது 20) என அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

சுமார் 80 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர். அதிகளவான பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்ததாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பலர் மிதிபலகையில் தொங்கிக்கொண்டு பயணித்துள்ளனர். சிறு காயங்களுக்குள்ளானவர்கள் ஆரம்பகட்ட சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். உயிரிழந்த இருவரினதும் சடலங்களும் புஸல்லாவை, வகுவப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்துச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள், பஸ்ஸை தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். பெரட்டாசி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பஸ் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ)

# இன, மத சாயம் இல்லாத அரசு உதயமாக வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜுலை.



"இன, மத சாயமற்ற-மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசு உதயமாக வேண்டும். ஊழல், மோசடி அற்ற ஒருவர் அரச தலைவராக வேண்டும். அதற்கான சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது."

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

9ஆம் திகதி என்பது, இலங்கையில் மாற்றங்கள் நிகழும் நாளாக மாறியுள்ளது. மே 9 மஹிந்த பதவி விலகினார். ஜுன் 9 பஸில் பதவியை விட்டுப் பறந்தார். ஜுலை 9 பதவி விலகும் அறிவிப்பை ஜனாதிபதி கோட்டா விடுத்தார்.

அதுமட்டுமல்ல பௌத்த பிக்குகளால் முன்னிலைப் படுத்தப்பட்ட ஜனாதிபதி, பௌத்த தேரர்களாலும், வாக்களித்த மக்களாலும் விரட்டியடிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் இது முக்கிய திருப்புமுனையாகும்.

மக்களுக்குத் தகவல் அறியும் உரிமை இருக்கின்றது. அந்தப் பணியை ஊடகங்கள் ஆற்றுகின்றன. ஜனாதிபதி பதவி விலகுவதில் ஊடகங்களின் பங்கும் உள்ளது. நல்ல வேலையை அவை செய்துள்ளன. அப்படி இருக்கையில் போராட்டக் களத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். பாதுகாப்பு வழங்கவேண்டியவர்களே, தாக்குதல் நடத்தியமை கவலைக்குரிய விடயமாகும்.

மகிந்த ஆட்சியில் ஊடக அடக்குமுறை தலைவிரித்தாடியது. நியூஸ்பெஸ்ட் ஊடகம் அதிக அச்சுறுத்தலை எதிர்கொண்டிருந்தது. தற்போதும் அந்த நிறுவனத்தின் ஊடகர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இது ஜனநாயகத்துக்கு விழுந்த அடியாகும்.

அடுத்து வரும் நாட்களில் அரசியல் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன. நாடாளுமன்றமும் அவசரமாகக் கூடும். ஊழல், மோசடி அற்ற ஒருவர் அரச தலைவராக வேண்டும். அனைவரும் ஒன்றுபட வேண்டும்-என்றார். (அ)

# பதவி விலக மறுக்கிறாரா ஜனாதிபதி? செயலகத்தின் அறிக்கையால் சர்ச்சை!

கொழும்பு, ஜூலை.12

**மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் தொடராக எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவி விலகுவார் என்று தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில் நேற்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை பலத்த சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

கடந்த ஒன்பதாம் திகதி சர்வ கட்சித் தலைவர்களின் சந்திப்பின் தொடராக அவர்களின் கோரிக் கைக்கு அமைய எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி பதவி விலகுவார் என்று தன்னிடம் தெரிவித்ததாக சபாநாயகர் ஊடகங்களுக்கு அறி வித்திருந்தார்.

நேற்றுக் காலை பிரதமர் அலு வலகம் வெளியிட்ட அறிக்கையில், ஜனாதிபதி பதவி விலகுவது தொடர்பில் உத்தியோகபூர்வமாக பிரதமருக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே,

நேற்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதியின் எந்த உத்தி யோகபூர்வ அறிவித்தலும் சபா நாயகர் ஊடாகவே வெளியிடப் பட்டும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில் பிரதமர் செய லகம் வெளியிட்டுள்ள அறிக் கையை ஜனாதிபதி செயலகம் மறை முகமாக மறுத்துள்ளதா என்ற சந் தேகம் வலுத்துள்ளது.

குறித்த அறிக்கையின் ஊடாக ஜனாதிபதி பதவி விலகப்போவதில் லையா? என்ற சந்தேகமும் வலுத் துள்ளது.

இதனிடையே,

பிந்திய தகவல்களின்படி சர்வ கட்சி அமைச்சரவை அமைக்கப்படு மாக இருந்தால் அப்போது பதவி விலகுவதாக அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர்கள் தீர்மானித்துள் ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னாரில் கிராம ரீதியாக எரிபொருள் விநியோகம்




மன்னார், ஜூலை. 12

மன்னார் நகர பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட கிராமங்களுக்கு எரிபொருள் அட்டை யின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கும் நடவ டிக்கை நேற்று திங்கட் கிழமை காலை தொடக் கம் இடம்பெற்றது.

மன்னார்-தலை மன் னார் பிரதான வீதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரி பொருள் நிரப்பு நிலை யத்தில் மாவட்ட செய லகத்தின் ஒழுங்கமைப் பில் பிரதேச செயலகத் தின் கண்காணிப்பில் எரிபொருள் சுமுகமான முறையில் வழங்கப்பட் டது.

அதன் அடிப்ப டையில் மோட்டார் சைக் கிள்களுக்கு 2000 ரூபா வுக்கும், முச்சக்கர வண் டிக்கு 2500 ரூபாவுக்கும் , கார்களுக்கு 5000 ரூபா விற்கும் பங்கீட்டு அடிப் படையில் எரிபொருள் வழங்கப்பட்டது.

நேற்று திங்கட்கிழமை சௌத்பார், பனங்கட்டு கொட்டு மேற்கு, பனங் கட்டுகொட்டு கிழக்கு, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை மேற்கு, உப் புக்குளம் வடக்கு ,உப்புக் குளம் தெற்கு,பெரிய கடை, பெற்றா, சாவற் கட்டு ,சின்னக்கடை ஆகிய 11 கிராம அலுவலர் பிரி வுகளை உள்ளடக்கி எரி பொருள் வழங்கப்பட் டது.

நேற்று வழங்கப்ப டாத கிராமங்களுக்கு அடுத்த கட்டமாக வழங் குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. (அ)

# ஹப்புத்தளையில் 33 ஆயிரம் லீற்றர் எரிபொருளுடன் புரண்டது வாகனம்

கொழும்பு, ஜூலை. 12

ஹப்புத்தளை நகருக்கு திருக்கோண மலை ஐ.ஓ.சி முனையத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட 33000 லீற்றர் எரிபொருள் தாங்கியை கனரக வாகனம் ஹப்புத்தளை பங்கெட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் வீதியை விட்டு விலகி தடம்புரண்டது.

சாரதியின் தூக்க கலக்கத்தினால் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள் ளது.

இவ்விபத்து குறித்து ஹப்புத்தளை பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



விபத்தினால் எரிபொருள் முற்றாக வீண் விர யம் ஆனதுடன் எவ்வித உயிர் சேதமும் ஏற்பட வில்லை. (அ)

# கடல் வளத்தை அந்நிய தேசத்துக்கு விற்பதற்கு அனுமதிக்க மாட்டோம்!

## மன்னார் மீனவர் சமாசம் அறிவிப்பு

மன்னார், ஜூலை. 12

இந்திய மீனவர்களின் வருகை என்பது பல வருடங்களாக பேசப்பட்டு வருகின் றது. தற்போது இலங்கை இருக்கும் பொரு ளாதார நெருக்கடி நிலையை பயன் படுத்தி எமது கரையோரங்களில் உள்ள வளங்களை கூட சூறையாடி செல்கிறார் கள்.இது தொடர்பாக ஏற்கனவே நாங் கள் முறையிட்டும் தான்தோன்றித்த னமாக செயல்பாட்டு நீண்ட காலமான எமது கோரிக்கையை அவர்கள் செவி மடுப்பதாக தெரியவில்லை என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசச் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் அவர்களுக்கு ஒரு வேண்டு கோளை முன் வைக்கின்றோம். தயவு செய்து எமது வளங்களை எமது மக்க ளுக்காக விட்டு வையுங்கள்.

எமது வளங்களை நீங்கள் அள்ளிச் செல் வதால் எமது மக்கள் மீண்டும் மீண்டும் பட்டினிச் சாவை எதிர்கொள்கிறார்கள்.

வடபகுதியில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரை எரி பொருள் அற்ற நிலையில் மாதக்கணக் காக மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

இதனால் கடலில் போடப்பட்டுள்ள அவர்களின் வலைகளை கூட கரைக்கு கொண்டு வர முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

வடக்கின் பல பகுதிகள் அந்நிய தேசத்தவர்களுக்கு விற்கப்பட உள்ள தாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அவை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். மீனவ சமுதாயத்தின் மீன் பிடி பிரச்னை தொடர்பான சம்பவங் களை கையாளும்போது அவர்களின் ஆலோசனைகளை கேட்டு செயல்படுத் தப்பட வேண்டும்.

எதிர் காலத்தில் இங்கு உள்ள அரசி யல் தலைமைத்துவங்கள் இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை அந்நிய நாட்டிற்கு விற்பதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் .

அவ்வாறு ஒரு நிலை வருமாக இருந்தால் இலங்கை தேசத்தில் தற் போது ஒரு சம்பவம் நடந்தது போன்று வடமாகாணத்தில் இவ்வாறு ஒரு சூழ் நிலை உருவாகும் என்று இந்த நேரத்தில் எச்சரிக்கை விடுக்கின்றோம்-என்றார். (அ)

# யாழ் பல்கலைக்கழக வணிக பீடத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு வியாழனன்று

யாழ்ப்பாணம், ஜூலை. 12

யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் வருடாந் தம் நடாத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாட்டின் ஏழாவது மாநாடு எதிர் வரும் நாளை மறுதினம் வியாழக்கிழமை, முற்பகல் 9.00 மணி முதல் முகாமைத் துவ கற்கைகள் வணிக பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள் ளது.

“புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதல்” ( Transforming Business for Resilience in New Normal )” என்ற தொனிப்பொருளில் இடம் பெற வுள்ள இந்த இவ் ஆய்வு மாநாட்டில் ஆஸ் திரேலியாவின் சதேர்ண் குறொஸ் பல்க லைக்கழக ( Southern Cross University) தகவல் அமைப்புகள் முறைமைப் பேரா சிரியர் தர்சனா செடெராவின் முதன்மை உரை நிகழ்நிலை வாயிலாக இடம்பெற வுள்ளது.

கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப் படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி, முயற்சியாண்மையும் புதியன புனைத லும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மனித வள முகாமைத்துவம் மற்றும் நிறு வன கற்கைகள், கற்றல் கலாச்சாரம் மற் றும் சமூகம் ஆகிய 07 உப பிரிவுகளின் கீழ் 43 ஆய்வுக் கட்டுரைகள் இவ் ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள் ளன.

இவற்றுடன், மாணவர்களின் அறிவு மற்றும் ஆய்வுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் ஆய்வு மாநாடும் (Student Research Symposium) ஒழுங் குபடுத்தப்பட்டுள்ளது. அதற்காக 6 ஆய்வு கட்டுரைகளும் சமர்ப்பிக்கப் படவுள்ளன. மாநாட்டு நிகழ்வுகளை யும், ஆய்வுச் சமர்ப்பணங்களையும் http://www.iccm.maco.jfn.ac.lk என்ற இணையத் தளத்தினூடாக நேரலையா கப் பார்வையிட முடியும்.

இம் மாநாட்டுக்கு எமேரல்ட் பதிப் பகம் (Emerald Publishing) கல்விசார் பங் காளியாகவும், இலங்கை வங்கியா ளர்கள் நிறுவனம் ( Institute of Bankers of Sri Lanka), இலங்கை பட்டய நிதி பகுப் பாய்வாளர் சமூகம் ( CFA Society Sri Lanka ), இலங்கை சந்தைப்படுத்தல் நிறு வனம் ( Sri Lanka Institute of Marketing), பட்டயக் கணக்காளர் நிறுவனம் (Charted Accountants of Sri Lanka), பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் ( Association of Charted Certified Accountants) ஆகியன தொழில்முறை பங்காளர்களாகவும் அனுசரணை வழங்குகின்றன. (அ)

# எரிவாயு கொள்வனவின்போது மின்சார பட்டியல் கட்டாயம்!

3700 மெற்றிக் தொன் சமையல் எரி வாயுவை சந்தைக்கு விநியோகிக்கும் நட வடிக்கைகளை நேற்று முதல் லிட்ரோ நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, நேற்றும், இன்றும் கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க பகுதிகளுக்கும், நாளை ஏனைய இடங் களுக்கும் எரிவாயு கொள்கலன் விநியோகிக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், சமையல் எரிவாயு கொள் கலனை கொள்வனவு செய்யும்போது, கடந்த மே மாத மின்சார பட்டியலை வைத்தி ருத்தல் அவசியமாகும். இதன் மூலம் அதி களவான எரிவாயு கொள்கலனை பதுக்கி வைக்கும் செயற்பாட்டை தவிர்க்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட் டுள் ளது. (அ)

# அரசியல் சூதாட்டத்தை நிறுத்த வேண்டும் பஸில்

## உலப்பனே சுமங்கல தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உடனடியாக ஆட்சி அதிகார பலத்தில் இருந்து விலகி, சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க இடமளிக்க வேண்டும் என்று உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று அஸ்கிரிய மாநாயக்க தேரரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பசில் அரசியல் தந்திரங்கள் மூலம் அதிகாரத்தை பெற முயற்சிக்கக்கூடாது.

அரசியல் தந்திரங்கள் மூலம் பொதுஜன பெரமுனவிடம் தொடர்ந்தும் அதிகாரத்தை வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டாம். தொடர்ந்தும் இப்படி செய்தால், நாட்டில் இரத்த களரி ஏற்படும்.

இதனால், ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருக்க முயற்சிக்கும் இரட்டை குடியுரிமை பெற்ற நபருக்கு (பஸில் ராஜபக்ஷ) அரசியல் சூதாட்டத்தை நிறுத்துங்கள் எனக்கூறிக்கொள்கிறோம்.

விரட்டியடிக்கப்பட்ட சகாக்களை கொண்டு சர்வகட்சி அரசாங்கத்தை ஆட்டுவிக்க முயற்சிக்க வேண்டாம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தற்போது மக்கள் ஆதரவு இல்லை.

இதனால், அவர்கள் ஆட்சி அதிகார பலத்தில் இருந்து உடனடியாக விலகி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்தும் பஸில் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷவினரின் அடிமையாக இருக்காது நாட்டுக்காக சுதந்திரமாகச் செயற்படுமாறு கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அப்படியில்லை என்றால், எமக்கு அடுத்த தேர்தல் நடத்தப்படும் வரை காத்திருக்க முடியாது. நாங்கள் பொதுமக்களின் பலத்தை அன்று கொழும்பில் காட்டினோம்.

இதற்கு அப்பால் சென்று எமது பலத்தை காட்ட தயங்க மாட்டோம் என்பதை குறிப்பாக பஸில் ராஜபக்ஷவுக்கு கூறி வைக்க விரும்புகிறோம்- என்றார். (அ)

# முல்லைத்தீவு மாவட்ட மக்களை புறக்கணிக்கின்றதா யாழ்ராணி?

முல்லைத்தீவு, ஜூலை. 12

யாழ்ப்பாணத்துக்கும்-கிளிநொச்சிக்கும் இடையே யாழ்ராணி என்ற விசேட ரயில் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பணியாளர்கள் மற்றும் அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பணியாளர்களுக்கு வசதியாக இச்சேவையை ரயில் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றி வருகின்ற யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேந்த அதிகளவான அதிகாரிகள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் குறித்த ரயில் மாங்குளம் ரயில் நிலையம்வரை சேவையை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன.

ரயில் சேவையை பொறுத்த வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு பிரதான ரயில் நிலையமாக மாங்குளம் ரயில் நிலையம் உள்ள நிலையில் யாழ்.ராணி ரயில் சேவையை மாங்குளம் வரை மேற்கொள்ளாததையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மாங்குளம் நகரில் இருந்து மல்லாவி ஊடாக வெள்ளாங்குளம் மற்றும் பாண்டியன்குளம் வரையான பகுதிகளின் மக்களும், ஒட்டுசுட்டான் ஊடாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களுக்களில் வசிக்கும் முல்லைத்தீவு மாவட்ட மக்களும் சேவை பெறக்கூடிய ஒரே ஒரு ரயில் நிலையம் மாங்குளம் புகையிரத நிலையமாகும்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து பணிக்கு வருகின்ற அதிகாரிகள் மாங்குளம் வந்து அங்கிருந்தே ஏனைய இடங்களுக்கு செல்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் ஏன் தற்போது ஆரம்பிக்கப்பட்ட யாழ்ராணி ரயில் சேவையை கொக்காவில் காட்டுப்பகுதியில் உள்ள முறிகண்டி ரயில் நிலையத்தோடு சேவையை நிறுத்துகிறது. அங்கிருந்து ஏனைய இடங்களுக்கு எவ்வாறு பயணத்தை தொடர்வது? அங்கிருந்து வீதிக்கு வரக் கூட போக்குவரத்து வசதி இல்லை இவ்வாறு இருக்க ஏன் இந்த சேவையை மாங்குளம் வரை நடத்த தீர்மானிக்கவில்லை? இதிலும் முல்லைத்தீவு மாவட்டம் புறக்கணிப்பா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. (அ)

# சர்வகட்சி ஆட்சி தொடர்பில் கொழும்பில் பலசுற்று பேச்சு

கொழும்பு, ஜூலை. 12

சர்வகட்சி ஆட்சி அமைப்பது தொடர்பில் கொழும்பில் பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையின் தற்போதைய சூழலில் கோட்டா - ரணில் அரசை நீக்கி சர்வகட்சி ஆட்சி அமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு இடம்பெறும் பேச்சுக்களில் கோட்டா - ரணில் அரசு மக்களின் கோரிக்கைக்கமைய பதவி விலகி மாற்று அரசை அமைக்க அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் தலைவர்களிடம் சஜித் பிரேமதாஸ கோரி வருகின்றார் எனத் தெரியவருகின்றது.

இதேநேரம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக மறுத்தாலும் 113 பேரின் ஆதரவுடன் இருப்பவர் பிரதமராக முடியும் என்பதன் அடிப்படையிலும் ஆதரவு தேடல் முயற்சி இடம்பெற்று வருகின்றது.

இந்த முயற்சி “சூம்“ வழியாகவும் நேரடியாகவும் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பேச்சுக்களில் பல கட்சிகள் ஆதரவைத் தெரிவிக்கின்ற போதிலும் சில கட்சிகள் நிபந்தனைகளை மட்டுமே தெரிவித்து வருகின்றன. (அ)



# சகல அமைச்சர்களும் பதவி விலக தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 12

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் பதவி விலக தீர்மானித்துள்ளனர் என அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்திற்கு வழிவிட்டு இவ்வாறு அனைத்து அமைச்சர்களும் பதவி விலக தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்றுக் காலை பிரதமர் அலுவலகத்தில் அமைச்சரவை அமைச்சர்களுடன் கலந்துரையாடினார்.

சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்கு உடன்பாடு ஏற்பட்டவுடன், அந்த அரசாங்கத்திடம் தமது பொறுப்புக்களை ஒப்படைக்கத் தயார் என கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சர்கள் அனைவரும் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)





# யாழ்.-கிளிநொச்சி இடையே விசேட ரயில் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை. 12

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி விசேட ரயில் சேவை நேற்று ஆரம்பமாகியது. நேற்று காலை 7.50 மணியளவில் கிளிநொச்சி ரயில் நிலையத்தை சென்றடைந்த பிரயாணிகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் வரவேற்றார்.

உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்களின் போக்குவரத்து இலகுபடுத்தலுக்காக விசேட ரயில் சேவையை ஆரம்பித்து தருமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ரயில் திணைக்களத்தினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்த நிலையில் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் குறித்த சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றைய முதல் சேவையை வரவேற்ற மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிடுகையில் -

பல்வேறு முயற்சிகளின் பின்னர் புகையிரத சேவைகள் திணைக்களம் இந்த விசேட சேவையை ஆரம்பித்துள்ளது.

இதனால் அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் நன்மை அடைந்துள்ளனர். இந்த சேவையை பொது மக்களும் பயன்படுத்தலாம் - என்றார். (அ)

# சபாநாயகர் இல்லத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை. 12

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் உத்தியோக பூர்வ இல்லத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக்காக பொலிஸ் அதிரடிப் படையினருடன், மேலதிக குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகியதன் பின்னர் பதில் ஜனாதிபதியாக சபநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் அவரது இல்லத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பொருளாதார நெருக்கடிகளுக்கு கொரோனாவே முக்கிய காரணம்

## கூறுகின்றார் சபாநாயகர்

கொழும்பு, ஜூலை. 12

ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக பதவி விலகிய ஒரு வாரத்துக்குள் புதிய கட்சி கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு கொரோனாவே பிரதான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.



“கோவிட் தொற்றுநோய் நாட்டில் பொருளாதார ரீதியாக பேரழிவை உருவாக்கியுள்ளது, என்றும் எங்கள் பணத்தை தடுப்பூசிகளுக்காக செலவிடவேண்டியிருந்தது,” எனவும் அவர் அந்த ஊடகத்துக்கு கூறியுள்ளார். (அ)

# “G -20 ” ஜீ -20 வெளியுறவு அமைச்சர் மாநாடு:

# உலக பொருளாதார நெருக்கடிகளை தீர்க்காமல் முறிவடைந்த மாநாடு !

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

பாரிய பொருளாதார நெருக்கடியில் முழு உலகமும் திணறும் இன்றைய கால கட்டத்தில் இந்தோனசியா, “பாலி”யில் கடந்த ஜூலை 7 முதல் 8, 2022 வரை நடைபெற்ற ஜீ- 20 வெளியுறவு அமைச்சர் மாநாடு பலத்த எதிர்பார்ப்புகளுடன் நடைபெற்றது. ஆயினும் நடந்தேறிய ஜீ-20 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு எவ்வித தீர்க்கமான முடிவுகளைக் காணாமலயே நிறைவடைந்துள்ளமை கவலைக்குரியதே.




**ஜீ- 20 (Group of Twenty)**

ஜீ- 20, 20 நாடுகளின் என்பது இருபது உலக நாடுகள் தலைமை மற்றும் நிதி வளங்களின் நிதி அமைச்சர்கள் கூட்டமைப்பாகும். இவ்வமைப்பில் உலகின் 19 வளர்ச்சியடைந்த நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் உறுப்புரிமை பெற்றுள்ளன.

அர்ஜன்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்சு, ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஸ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைந்த பொருளியல் கூட்டமைப்பு ஆகும். கூட்டாக, ஜி-20 பொருளாதாரம் மொத்த உலக உற்பத்தியில் 85% உம், உலக வணிகத்தில் 80மூ உம், உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும் கொண்டுள்ளது. ஜி-20 அரசுத் தலைவர்கள் அல்லது நாட்டுத் தலைவர்கள் இதன் உச்சிமாநாடுகளில் கலந்து கொள்கின்றனர்.

உலகளாவிய வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பில் கவனம் செலுத்தும் ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்தபோதிலும், ரஷ்ய- உக்ரைனில் நடக்கும் மோதல் விடயமே இம்மாநாட்டில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

**சீன - ரஷ்யா வெளியுறவு மந்திரிகள் சந்திப்பு:**

கடந்த வியாழன் அன்று ரஷ்யாவின் உயர்மட்ட இராஜதந்திரி செர்ஜி லாவ்ரோவ் ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கையின் முக்கிய பணிகளை உக்ரைனில் நிறைவேற்றும் போக்கை பற்றி சீன வெளியுறவு மந்திரி வாங் யீடம் தெரிவித்தார் என ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் கூறியது.

உக்ரைனில் உள்ள போர் சூழ்நிலையின் பின்னணியில் மேற்கு நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த தங்கள் மதிப்பீட்டை அமைச்சர்கள் பகிர்ந்து கொண்டனர் என்று அது மேலும் கூறியது. ஐக்கிய நாடுகள் சபையைத் தவிர்த்து சட்டத்திற்குப் புறம்பாக ஒருதலை பட்சமான தடைகளை அறிமுகப்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாதது என்று இரு நாடுகளும் வலியுறுத்தின.

**அமெரிக்காவும் நட்பு நாடுகளும்:**

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை முடிந்தவரை பல வழிகளில் தண்டிக்க முற்பட்டுள்ளன. உயர்மட்ட ஜீ 20 உச்சிமாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக அச்சுறுத்துவது உட்பட, புடின் இம்மாநாட்டிலிருந்து நீக்கப்பட வேண்டும் எனவும் கோருகின்றனர்.




இந்த ஆண்டு ஜி 20 தலைவர் என்ற முறையில், இந்தோனேசியா ஒரு நிகழ்வு அமைப்பாளராக மட்டும் செயல்படுவதை விட உலக அரங்கில் மிகவும் ஆக்கபூர்வமான பங்கை வகிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மேலும் ஜனாதிபதி ஜோகோ விடோடோ உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைக் கையாள்வதில் இந்நாடு நடுநிலை வகிக்க முயன்றது.

ஜீ 20 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு இரண்டு அமர்வுகளைக் கொண்டிருந்தது. முதல் அமர்வில், இரண்டு சிறப்புப் பேச்சாளர்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ் தற்போதைய புவிசார் அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் பலதரப்பு கொள்கைகள் மற்றும் மன்றங்களுக்கு அதிகாரமளித்தல் பற்றிய உணவு மற்றும் எரிசக்தி உலக பாதுகாப்பு குறித்த இரண்டாவது அமர்வில், உணவு நெருக்கடி, உரத்தட்டுப்பாடு மற்றும் உலகளாவிய பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றை சமாளிக்கும் மூலோபாய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் பொருட்களின் விலைகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் சீர்குலைவு ஆகியவை வளரும் நாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத் தியுள்ளன. இந்த காரணத்திற்காக, ஜீ 20 உலகின் பல்வேறு பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பொருளாதார மன்றமாக, நிலையான சமூக-பொருளாதார தீர்வுகளைக் கண்டறிந்து இந்த சிக்கல்களை விரிவாக விவாதிக்கும் அதிகார மையமாக அமைந்து உள்ளது.



**உலகப் பொருளாதார வீழ்ச்சி:**

உக்ரைனின் புதிய போர் சூழ்நிலையுடன், உணவு பாதுகாப்பு தொடர்பான விஷயங்களும் ஜீ 20 கூட்டங்களில் பரவலாக விவாதிக்கப்பட்டது. இந்தோனேசிய அரச தலைமையின் கீழ் ஜீ 20 நாட்டு தலைமை கூட்டங்களின் தொடர் உச்சிமாநாடு நவம்பர் 15-16, 2022 இல் நடைபெறவுள்ளது.

**ரஷ்யா மந்திரி செர்ஜி லாவ்ரோவ் :**

பதற்றமான சூழ்நிலையில் ஜீ - 20 வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் ரஷ்யாவின் உயர்மட்ட இராஜதந்திரி செர்ஜி லாவ்ரோவும் கலந்து கொண்டார். போரிடும் இருநாடுகளுக்கு சென்ற முதல் ஆசியத் தலைவர் விடோடோஆவார். உக்ரைன் ஜீ-20 இல் உறுப்பினராக இல்லை, ஆனால் விடோடோ உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ் கியை நவம்பர் உச்சி மாநாட்டிற்கு அழைத்துள்ளார், இது அனைத்து தரப்பினரையும் சமாதானப்படுத்தும் எனவும் இம்மன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய கவனத்தை பெறுகிறது.

ஆயினும்போர் தொடர்ந்தால் தான் கலந்து கொள்ளமாட்டேன் என்று ஜெலென்ஸ்கி கூறியதுடன், வீடியோ இணைப்பு மூலம் விவாதங்களைப் பின்பற்றத் தேர்வு செய்தார். அப்போது ரஸ்ய வெளியுறவு அமைச்சர் மாநாட்டிலில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

இம்மாநாட்டில் வாஷிங்டனுக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையேயான விரிசல்களும் தெளிவாக புலப்பட்டது. புதனன்று, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனும் சீன வெளியுறவு அமைச்சரும் “பாலி”யில் சந்திப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு, அமெரிக்கா மற்றும் நேட்டோ மீது சீனா கடுமையான கண்டனத் தாக்குதலை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் சீன வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் கூறுகையில்,வாஷிங்டன் சர்வதேச விதிகளை அமெரிக்க சுயநலத்திற்காக பிரச்சனைகளை உருவாக்கும் நாடு என்றும் அவர் கூறினார்.

**உக்ரைன் மீதான போர்:**

ஜீ-20 கூட்டங்களில் கலந்துகொள்ளும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அந்தோனி பிளிங்கன், ரஸ்ய வெளியுறவு அமைச்சர் லாவ்ரோவை சந்திக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றும் கூறினார். ஆனால் அவர் பெய்ஜிங்கின் உயர்மட்ட தூதர் வாங்கை இந்தசனிக்கிழமை மீண்டும் சந்தித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பிற்குப் பிறகு சீனாவின் நிலைப்பாட்டை வாஷிங்டன் கேள்வி எழுப்பியதால், இச்சந்திப்பு அமெரிக்க மற்றும் சீன அதிகாரிகளுக்கு இடையேயான சமீபத்திய உயர் மட்ட தொடர்பாக இருந்தது.

**உலகின் மாறுபட்ட ஜீ-20 போர்க்களம்**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு உலக சந்தைகளை மூச்சுத் திணறடித்து, இறைச்சி , பால் பொருட்கள், தானியங்கள், சர்க்கரை மற்றும் தாவர எண்ணெய்கள் ஆகியவற்றின் விலைகளை கடுமையாக உயர்த்திய நேரத்தில் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான வழிகளைத் தேடுவது பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கமாக இருந்தது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பின் விளைவு எதற்கு முக்கியமானது என்னவென்றால்இப்போது உலகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையான உணவுப் பற்றாக் குறையே காரணமாகும்.

வளரும் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாட்டுமக்கள் கடுமையான வறுமை மற்றும் பசியில் விழுவதைத் தடுப்பதற்காக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு உள்ள பங்களிப்பை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

**உணவு பற்றாக்குறை:**

உலகின் கோதுமை ஏற்றுமதியில் ரஷ்யாவும் உக்ரைனும் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளன. மற்றும் உக்ரைன் மட்டும் 400 மில்லியன் மக்களுக்கு உணவளிக்கும் தானியத்தை வளர்க்கிறது. ஆனால் ரஸ்யாவின் முற்றுகையால் ஒரு மாதத்திற்கு 2 மில்லியன் தொன் மட்டுமே நகர்த்த முடிகிறது. இது வழக்கத்தை விட 60 சதவீதம் குறைவாகும்.

மில்லியன் கணக்கான தொன்உக்ரேனிய தானியங்கள் கருங்கடலில் பாதுகாப்பான வழியாக அனுப்பப்படுவதற்குக் காத்திருக்கின்றன. சோளம் மற்றும் சூரியகாந்தி எண்ணெயை உலகின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்களில் உக்ரைனும் ஒன்றாகும், ஆனால் ரஷ்யாவின் படையெடுப்பு அந்த ஏற்றுமதியின் பெரும்பகுதியை நிறுத்தியுள்ளது. இந்த இடையூறுகள் பல வளரும் நாடுகளின் குறிப்பாக ஆப்பிரிக்காவின் உணவு விநியோகத்தை அச்சுறுத்துயுள்ளன.

பலத்த எதிர்பார்ப்புகளுடன் நடந்தேறிய ஜீ-20 வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு எவ்வித தீர்க்கமான முடிவுகளைக் காணாமலயே நிறைவடைந்துள்ளது.

**அடுத்த மாநாடு இந்தியாவில்:**

எதிர்வரும் ஜ20 மாநாடு இந்தியா தலைமையில் நடை பெற உள்ளது. அதற் கான இந்தியாவின் ஒருங்கிணைப்புவரும் 2023-ஆம் ஆண்டில் ஜி20 நாடுகள் மாநாட்டு அதிகாரி யாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.



2023-ஆம் ஆண்டு மாநாட்டுக்கு இந்தியா முதன்முறையாக தலைமை வகிக்கிறது. ஜி20 கூட்டமைப்புக்கு வரும் 2024-ஆம் ஆண்டு நவம்பர் 30-ஆம் திகதி வரை இந்தியா தலைமை வகிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போராட்டக்காரர்களைக் கொண்டு தமது காரியத்தை நிறைவேற்றியவர்கள் யார்?

**- ப. தெய்வீகன்**

> இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை, அமெரிக்காதான் சர்வதேச நாணய நிதியம் (IMF), அமெரிக்காதான் ஐ.நா. அமெரிக்காதான் இந்தியா, அமெரிக்காதான் எல்லாமே. அவர்களை மீறி எதுவும் நடைபெறாது என்பது இன்றுள்ள அரசியல் பாலபாடம்.



**கொ**ரியாவில் பிறந்து கொழும்புக்கு வேலை செய்வதற்காக வந்த சீமாட்டி ஒருவரின் பெயரை சில மாதங்களுக்கு முன்னர் முழு இலங்கையும் "ஜூலி சங்" என்று கேள்விப்பட்டிருந்தது. பைடன் அரசு பதவியேற்ற பிறகு, அமெரிக்காவின் தூதுவராக அனுப்பப்பட்ட அம்மணி அவர். ஆறேழு மொழி பேசக்கூடிய - ஐந்தடிக்கும் குறைவான உயரமுடைய - அவர், தன்னை உயரமாகக் காட்டிக்கொள்வதற்கு, அநேகமாக குதி உயர்ந்த சப்பாத்து அணிந்திருப்பார். இராஜதந்திரிகளுடன் அளவோடு பேசுவார். புகைப்படங்களுக்கு அளந்து சிரிப்பார். ஆழமான திட்டங்களுடன் அலைவார். ஒரு நாய்க்குட்டியை செல்லமாக அணைத்துக் கொண்டு, ருவிட்டரில் அடிக்கடி படம் போடுவார்.



ஜூலி சங், சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை சென்று - வழக்கத்துக்கு மாறாக பல சந்திப்புக்களை மேற்கொண்டார். நல்லூரில் வழிபாட்டை முடித்துவிட்டு, காளாஞ்சியுடன் நின்று படமெடுத்துப்போட்டார். யாழ். ஆயரைச் சந்தித்து, தேவாலயங்களுக்கும் போனார். கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்தார். கொழும்பிலும் மனோ கணேசனிலிருந்து சந்திரிகா அடங்கலாக ஏகப்பட்டவர்களுடன் பேசினார். முழு இலங்கையும் அரிசிக்கும் பெற்றோலுக்கும் எரிவாயுவுக்கும் தெருவில் புரண்டுகொண்டிருந்த போது, அம்மையார் கதிரைகளின் ஒற்றை விளிம்பில் சாய்ந்தபடி, பல ரோடு பேச்சு நடத்துவதில் மும்முரமாயிருந்தார்.

ஜூலை 9 ஆம் திகதி போராட்டம் நெருங்கிக்கொண்டிருந்தபோது, அம்மையார் ஜூலி சங் - கிட்டத்தட்ட பகிரங்கமாகவே - போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர் போல, கோட்டா அரசுக்கு சாடைமாடையான அறிவுறுத்தல்களை வழங்கினார். போராட்டத்திற்கு முதல்நாள், காலிமுகத்திடல் சந்திரமுகியாகவே மாறி, அறிக்கை ஒன்றை விடுத்தார். "நாளை நடைபெறப்போகும் அற வழிப் போராட்டத்தை அரச படையினர் அடக்கக்கூடாது" - என்று சிரித்தபடி இறுக்கமாகக் கூறினார்.

அதன் பிறகு நேற்று (9) "கோட்டமனை புகுவிழா" எவ்வளவு சிறப்பாக நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ராஜபக்ஷக்களை ஆட்சிப்பீடத்திலிருந்து சுத்திகரிப்புச் செய்வதற்கு அமெரிக்கா பல காலமாக விரலிடையில் வைத்துப் பினைந்துகொண்டிருந்த திட்டத்தின் மிக நிதானமாக நிறைவேற்றிய நாள் நேற்றாகும்.

(இதனைத்தான் அமெரிக்கா, புலிகளை அழிப்பதற்கும் பல காலத்திட்டத்தின் பிறகு கனிய வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது)

அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கு "கோட்டா கோ கம" என்ற போராட்டம் திறம்பட பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சிறிய நாடுகளுக்குள் அரூபமாகத் தங்களது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, பெரிய நாடுகள் கையாளுகின்ற வழக்கமான அணுகுமுறைதான் இது. அதாவது, உயிர்ப்போடிருக்கின்ற அமைப்பு அல்லது போராட்டத்தை மிக லாவகமாகத் தங்களது திட்டத்துக்கு உபயோகிப்பது. "கோட்டா கோ கம" என்ற அமைப்பினரின் போராட்ட நோக்கம் என்ன? ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, இலங்கை அரசியலில் முழுமையான மாற்றத்தைக் கொண்டுவருவது. இதுதான் அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கும் கூட இலங்கையில் தேவையான ஒன்று. தங்களுக்குக் கேந்திர ரீதியில் தேவையான ஒரு இடத்தில், அளவுக்கதிகமான மக்களாதரவுடன் ஒருவர் திமிறிக்கொண்டிருந்தால், அமெரிக்காவுக்கு மூக்கு வேர்த்துவிடும். அவர் காந்தியாகவே இருந்தாலும் சாந்தி செய்துவிடுவார்கள். அந்த ஆட்சியைக் கவிழ்த்துக் கொட்டி, கழுவிப் பூட்டி, தங்கட நாட்டிலிருந்துகொண்டு போன சொலிக்கனத்தைத் தடவி, போல்ஸை சரி பார்த் தால்தான், அவர்களுக்குத் திருப்தி.

கோட்டா அரசு பல காலமாக அமெரிக்காவுக்குப் பிரச்சினையாக இருந்தது. (என்னென்ன வகைகளில் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்)

அதற்காக, நேரடியாக இலங்கைக்குள் இறங்கி எதிர்க்கமுடியாது. எதிர்க்கவும் கூடாது. ஏன் என்பதற்கான வரலாற்றுக்காரணிகள் அமெரிக்காவின் பொக்கெட் நிறைய உள்ளன. ஈராக், ஆப்கான் போல கண்டமேனிக்கு கையை விட்டு சுட்டுக்கொள்ளமாட்டார்கள்.



விளைவு: - "கோட்டா கோ கம" போராட்டத்தை ஆரத்தழுவிக்கொண்டார்கள்.

"கோட்டா கோ கம" - என்று ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்புவதற்காக எவ்வளவு காலம் காலிமுகத்திடலில் நின்று கூவினாலும், அந்தப் போராட்டத்திற்கு எதுவும் நடக்காது என்பது ராஜபக்ஷக்களைப் போலவே, அமெரிக்காவுக்கும் நன்கு தெரியும். அது வழக்கமாக லிப்டன் சுற்று வட்டத்திலும் நகரசபை மைதானத்திலும் நடைபெறும், ஜே.வி.பி ரக ஆர்ப்பாட்டத்தின் இன்னொரு வடிவ--மாக எரிந்து அணையும் அவ்வளவுதான்.

அதனால்தான், நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருப்பவனினதும் வயிற்றிலடிக்கும் கடும் பொருளாதார வரட்சியொன்று மூட்டி எரிக்கப்பட்டது. கடந்த ஒரு மாத காலமாக, பசியின் உச்சம் காலி முதல் காலி முகத்திடல்வரை சிங்களவரை விடாது விரட்டியது. பெற்றோலுக்கும் சாப்பாட்டுக்கும் வரிசையில் நின்றவர்கள் 15 பேர்வரை செத்தார்கள். மக்கள் சாரி சாரியாக நாட்டை விட்டு ஓடினார்கள். கடவுச்சீட்டு வரிசையில் நின்ற பெண்ணுக்கு, அதிலேயே குழந்தை பிறக்குமளவுக்கு நாடு சீரழிந்து, சீழ் வடிந்தது. வரலாறு காணாத உணவுப்பஞ்சத்தினால், அத்தனை மக்களும் வீதி வீதியாய் அலைந்தார்கள்.

அத்தனை பேரினதும் கோபத்தை ராஜபக்ஷக்களுக்கு எதிராகத் திருப்புவதற்கு, சகல காய்களையும் கவனமாக நகர்த்தியது அமெரிக்கா. இலங்கை யார் யாரிடம் சென்று உதவிக்காகக் காலில் விழுந்ததோ, அத்தனை பேரையும், விலத்திக்கொண்டு, தங்கள் பக்கம் வந்து நின்றுகொள்ளச் சொன்னது. "கொடுக்கத் தயார்" என்ற உதவியைக்கூட இந்தியா பிறகு நிறுத்திக்கொண்டது. அவ்வளவு தூரத்திற்கு ராஜபக்ஷக்களை முழங்காலில் இருத்தி வைத்துப் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு அமெரிக்கா தயாரானது.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை, அமெரிக்காதான் சர்வதேச நாணய நிதியம் (IMF), அமெரிக்காதான் ஐ.நா. அமெரிக்காதான் இந்தியா, அமெரிக்காதான் எல்லாமே. அவர்களை மீறி எதுவும் நடைபெறாது என்பது இன்றுள்ள அரசியல் பாலபாடம்.



ஆக, தங்களது குசினிக்குள் கனகாலமாகக் கழுவாமல் கிடந்த பாத்திரத்தை அமெரிக்கா, நேற்று கழுவிக் கவிழ்த்து தண்ணியொழுக வைத்திருக்கிறது. இனி, தாங்கள் நினைத்தவாறான ஒரு
ஆட்சிப்பொறிமுறையை
- ஆட்சித்தலைவர்களை
- உள்ளூர் உளவாளிகளை
- கலப்படமற்ற புதிய புரட்சி அமைப்புக்களை
- அவர்கள் உருவாக்குவார்கள்.

தூதுவர் ஜூலியா சங் வழக்கம் போல ருவிட்டரில் படம் போடுவார். அவர் அணைப்பிலிருக்கும் நாய்க்குட்டி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும்.

(முகநூல் 10.07.2022)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

i) பலா கன்று போல பயிர் : ............................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) தனிச்சொல்லை எழுதுக.


i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) Bread : ........................... ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

i) do / like? / What / you : ............................................................................

ii) old / How / you? / are : ........................................................................... (2 புள்ளிகள்)

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) රෝහල : ...............................................................

ii) දොළහ : ........................................................ (02 புள்ளிகள்)

15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) சோறு சாப்பிடுங்கள் : ......................................................................................

ii) அங்கே பாருங்கள் : ...................................................................................... (02 புள்ளிகள்)

❖ விடை எழுதுக.

16) | 7 | 8 | 3 | 0 | இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

.................................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன / அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

## கல்வி tv CHANNEL-1 — 12.07.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2 — 12.07.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆஸி. செல்ல முற்பட்ட 77பேர் கிழக்கு கடற்கரையில் கைது!

## நேற்று அதிகாலை சம்பவம்



மட்டக்களப்பு, ஜூலை. 12

மட்டக்களப்பு களுவங்கேணி கடற்கரையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகில் சட்டவிரோதமாக பயணித்த 77 பேரை நேற்று திங்கட்கிழமை அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதில் பெண் ஒருவர் உட்பட 17 பேரை ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், ஏனைய 60 பேரை படகுடன் திருகோணமலை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய சம்பவதினமான நேற்று அதிகாலை 2 மணியளவில் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கடல்பகுதியில் இயந்திரப் படகில் பயணித்த 77 பேரை கடற்படையின் படகுகள் சுற்றி வளைத்தன.

இதில் சட்விரோத குடியேற்றக்காரர்கள் 60 பேரைக் கைது செய்ததுடன், குறித்த சட்டவிரோத படகில் ஏறுவதற்கு களுவங்கேணி கடற்கரையில் வான் ஒன்றில் காத்திருந்த 17 பேரைக் கடற்படை புலனாய்வுப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட 60 பேரையும் படகையும் திருகோணமலை கடற்படை முகாமுக்கு இழுத்துச் சென்றதுடன், களுவங்கேணி கடற்கரையில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட 17 பேரையும் 14 அரை இலட்சம் ரூபா பணத்தையும், வான் ஒன்றையும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.(அ)



# பஸ்ஸில் டீசல் தீர்ந்ததால் பயணிகள் நிர்க்கதி நிலை!

திருமலை, ஜூலை. 12

கிண்ணியா, கந்தளாய் ஊடான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று எரிபொருள் தீர்ந்து போனதால், பயணிகளுடன் நடு வீதியில் நின்ற சம்பவம், நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிண்ணியா சாலைக்குச் சொந்தமான பஸ்ஸே இவ்வாறு டீசல் தீர்ந்து போனதால் தம்பலகாமம் - கிண்ணியா பிரதான வீதியில் நின்றுள்ளது.

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு நிலையே இதற்கான காரணமாகும் ஆகும்.

கந்தளாயில் இருந்து கிண்ணியா நோக்கிப் பயணிகளை ஏற்றியவாறு பயணித்த நிலையிலேயே பஸ் வீதியில் நின்றமையால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர்.

கிண்ணியா பஸ் டிப்போவில் இருந்து டீசல் பெறப்பட்டு, மீண்டும் பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதனால் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக பொதுமக்கள் வீதியில் காத்திருந்ததாக தெரிவித்தனர். (அ)

# சமுர்த்திப் பணியாளர்கள் நேற்று பணி பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு, ஜூலை. 12

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தயோகத்தர்கள் நேற்று திங்கட்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளை தெரிவித்துள்ளது.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும், அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று திங்கட்கிழமை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்காததால் சமுர்த்தி வங்கிகளில் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. அத்துடன் சமுர்த்தி மகாசங்கத்தின் வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன. (அ)

# ஊடக அடக்குமுறைக்கு எதிராக கடும் கண்டனம்

மட்டக்களப்பு, ஜூலை. 12

இலங்கையில் இடம்பெறும் ஊடக அடக்குமுறைக்கு எதிராக கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். ஜெயராஜா, நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 09ஆம் திகதியன்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக வாஸஸ்தலம் போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்ட சந்தர்ப்பத்தில், மக்களுக்கு தகவல்களை வெளிக் கொண்டுவரும் நோக்கத்துடன் ஊடகவியலாளர்களால் எடுக்கப்பட்ட முயற்சி பொலிஸாராலும் விசேட அதிரடிப்படையினராலும் தடுக்கப்பட்டு, அவர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவை ஊடக சுதந்திரத்துக்கு விடப்பட்ட அச்சுறுத்தல் மட்டுமல்ல, ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் மனித உரிமை மீறலாகவும் நாம் காண்கின்றோம்.

மக்களின் தகவல் அறியும் உரிமைகளைக் கேள்விக் குறியாக்கும் நோக்குடன் சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்ட இதுபோன்ற மிலேச்சத்தனமான அடக்குமுறையை ஒரு சுயாதீன ஆசிரியர் சங்கம் என்ற வகையில், கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆரையம்பதியில் கைக்குண்டு மீட்பு



மட்டக்களப்பு, ஜூலை. 12

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி, மாவிலங்கத்துறையில் நேற்றுக் காலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாடு மேய்ப்பதற்காக சென்ற ஒருவர் வயல் காணியில் கைக்குண்டு கிடைப்பதைக் கண்டுள்ளார்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, குறித்த இடத்துக்கு சென்ற காத்தான்குடி பொலிஸார், கைக்குண்டை மீட்டனர்.

இது தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகளையும் மேற்கொண்டுள்ள காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# முதியவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை. 12

வீட்டில் இருந்த நபர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - மீராவோடை ஹமீட் சேர்மன் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்தே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வயர் ஒன்றினால் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் 55 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தினர் நேற்று முன்தினம் வெளியூர் ஒன்றுக்கு பயணம் சென்ற நிலையில், வீட்டில் தனிமையில் இருந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உலக அரசியலுக்கே செய்தி கூறியுள்ளனர் நாட்டு மக்கள்

## முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது

அம்பாறை, ஜூலை. 12

புதிய நாடொன்றை நோக்கி மக்கள் அலைகடலாக அணி திரண்டிருப்பது இலங்கை அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, உலக அரசியலுக்கே ஒரு செய்தியை கூறியிருக்கும் சம்பவமே.

மக்கள் தன் எழுச்சி வெற்றியை நோக்கி நகர்வது மகிழ்ச்சியளிக்கிறது எனஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பைறூஸ் தெரிவித்தார்.

நாட்டின் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தொடர்ந்தும் கூறுகையில்

பொறுமை காத்து அடங்கியிருக்கும் மக்கள் பொறுமையிழந்து வீதிக்கு இறங்கினால் என்ன நடக்கும் என்பதை மக்களை பலியிட நினைக்கும் எல்லோருக்கும் அறிய வைத்துள்ளது.

மக்கள் சுதந்திரமாக சுவாசிப்பதற்கும் கூட இன்று வரிசையில் நிற்கவேண்டிய அவலநிலை இலங்கையில் இருக்கிறது.

ஊழல், அதிகார துஷ்பிரயோகங்கள் காரணமாக சீரழிக்கப்பட்ட வளமிக்க இலங்கை தாய்நாட்டை மீட்க அரசியல்வாதிகளினால் கட்டமைக்கப்பட்ட இனவாத, பிரதேசவாத தடை சுவர்களை உடைத்துக்கொண்டு, இனவாத அரசுக்கு எதிராக கொழும்பு உட்பட முக்கிய இடங்களை முடக்கியிருப்பது இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய வரலாற்று திருப்பமாக உள்ளது.

இப்பணியை சிறப்பாக முன்னெடுக்க இரவுபகலாக அரசின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், கஷ்டங்களுக்கு மத்தியிலும் இரண்டு மாதங்களுக்கு மேலாக வீதியில் அமர்ந்திருந்து போராடிய நாளைய தலைவர்களான இளைஞர்கள், தாய்நாட்டை நேசித்த இலங்கையர்கள், மதபோதகர்கள், சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், ஊடக நண்பர்கள் உட்பட அவர்களுக்கு உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அரசியல் பிரமுகர்கள் எல்லோருக்கும் தாய்நாட்டை நேசிக்கும் இலங்கையனாக என்னுடைய நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்- என்றார். (அ)

# மாதவிடாய் வலியை அனுபவித்த ஆண்!

பீஜிங், ஜூலை 12

20 ஆண்டுகளாக அனுபவித்து வந்த மாதவிடாய் பிரச்னைக்கு சிகிச்சை பெற்றுள்ளார் சீனாவை சேர்ந்த 33 வயதான ஆண் ஒருவர்.

அவர் நீண்டகாலமாக வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார். வயிற்று வலியோடு இவருக்கு சிறுநீரில் இரத்தமும் வெளியேறி உள்ளது.

20 வருடங்கள் அவர் அனுபவித்த இந்த வலி மிகுந்த வேதனைக்கு காரணம் குறித்து மருத்துவர்கள் ஆய்வு செய்தனர். குரோமோசோம் சோதனையில்இ இவர் உயிரியல் ரீதியாக பெண் என்பதை உறுதி செய்தார்கள்.

தவிரஇ இவருக்கு பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகளான கருப்பை மற்றும் சினைப்பை உள்ளதையும் கண்டு பிடித்துள்ளனர். 20 வருடங்கள் கழித்து இந்த நபர், தான் பெண் என்பதை அறிந்துள்ளார்.

அதாவதுஇ பல வருடங்களாக இவருக்கு சிறுநீர் கழிப்பதில் சிரமம் இருந்துள்ளது. சிறுநீர் கழிக்கும் பிரச்னையை சரிசெய்யும் நேரத்தில் அவர் பருவமடைந்தது தெரியாமல் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிலிருந்து சிறுநீர் கழிக்கும்போது சிறுநீரோடு இரத்தமும், வயிற்றில் அசௌகர்யமும், வலியும் தொடர்ந்துள்ளன.

தொடர்ந்து 4 மணி நேரத்துக்கும் மேல் வயிற்று வலி நீடித்ததால், மருத்துவர், இவர் குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனக் கருதி அதற்கான சிகிச்சைகளை கொடுத்துள்ளார். அப்போதும் வலி தீர்ந்தபாடில்லை.

இந்நிலையில், கடந்த வருடம் இவருக்கு குரோமோசோம் பகுப்பாய்வு சோதனையும், இன்னபிற மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதில் இவருக்கு பெண் குரோமோசோம்கள் அதிகம் உள்ளதும், பெண்ணின் இனப்பெருக்க உறுப்புகளான கருப்பை மற்றும் சினைப்பை உள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆணுக்கான ஓமோனான ஆண்ட்ரோஜென் குறைவாகவும்,பெண்ணுக்கான ஓமோன் தூண்டல் அதிகம் இருப்பதும் தெரிய வந்தது.

அதாவது இவர் ஆண் மற்றும் பெண் ஆகிய இருவரின் இனப்பெருக்க உறுப்புகளோடு பிறந்துள்ளார். இது நாள்வரை அவருக்கு ஏற்பட்டு வந்த வயிற்றுவலியும், இரத்தப்போக்கும் மாதவிடாயின் காரணமாக ஏற்பட்டதும் தெரிய வந்திருக்கிறது.

இந்த உண்மையைக் கேட்டு அதிர்ந்துபோனவர், தான் ஆணாக இருக்கவே விரும்புவதாகக் கூறி உள்ளார். பெண்ணுக்கான இனப்பெருக்க உறுப்புகளை நீக்குமாறு கோரியதால், கடந்த மாதம் இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. (ஐ)

# யுரேனியத்தை 20 வீதத்துக்கு செறிவூட்ட ஆரம்பித்தது ஈரான்!

தெஹ்ரான், ஜூலை 12

**ஈரான் தனது நிலத்தடி போர்டோ அணுமின் நிலையத்தில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி யுரேனியத்தை 20வீதம் வரை செறிவூட்டும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. ஈரானிய அரச தொலைக்காட்சி இந்தத் தகவலை வெளியிட்டது.**



அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015இல் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, மின்சார உற்பத்தி உள்ளிட்ட அபிவிருத்தி தேவைகளுக்கு யுரேனியத்தை 5 வீதம் வரை செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

யூ-235 எனப்படும் அணுக்கருவை பிளவுக்கு மிகவும் பொருத்தமான ஓரிடமிகள் எனப்படும் இசோரோப்பை (Isotope ) பிரித்தெடுக்க, யுரேனியம் ஹெக்ஸாப்ளோரைட் வாயுவை (hexafluoride) சென்ட்ரிப்யூஜ்களில் (Centrifuge) செலுத்துவதன் மூலம் செறிவூட் டப்பட்ட யுரேனியம் தயாரிக்கப்படுகிறது.

குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியம் பொதுவாக 3 வீதம் முதல் 5 வீதம்வரை யூ-235-க்களைக் கொண்டதாக இருக்கும். இதை அணுசக்தி நிலையங்களில் மின்சாரத்தைத் தயாரிக்கப் பயன்படுத்தலாம்.

அதிக அளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியம் என்றால் 20வீதம் அல்லது அதற்கு மேல் செறிவூட்டப்பட்டதாக இருக்கும். இதை ஆராய்ச்சி நிலையிலுள்ள அணு உலைகளில் பயன்படுத்துவார்கள்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய 90வீதம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் தேவை. இந்நிலையிலேயே 5 வீதம் வரை செறிவூட்டல் ஒப்பந்தத்தை மீறி யுரேனியத்தை 20 வீதம் வரையான அளவுக்கு செறிவூட்டும் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015இல் அணுசக்தி ஒப்பந்தம் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கான மெலிதான வாய்ப்புகள் வளர்ந்து வருவதாக ஏற்பட்ட நம்பிக்கைக்கு மற்றோர் அடியாக ஈரானின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ. நா., பாதுகாப்பு பேரவை நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத் தானது. அந்த ஒப்பந்தத்தில், தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய, ஈரான் சம்மதித்தது. அதற்குப் பதிலாக, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக வல்லரசு நாடுகள் ஒப்புக் கொண் டன.

இவ்வாறான நிலையிலேயே தன் மீதான பொருளாதார தடைகளை நீக்க அழுத்தம் கொடுக்கும் வகையில் யுரேனியத்தை 20வீதம் வரையான அளவுக்கு செறிவூட்டும் நடவடிக்கைகளை ஈரான் தொடங்கியுள்ளதாகக் கருதப்படுகிறது.

# ரஷ்யாவின் தாக்குதலில் 15 பொது மக்கள் மரணம்!

கீவ், ஜூலை 12

உக்ரைனின் கார்கீவ் நகரில் அடுக்கு மாடி குடியிருப்பில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 15இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இதுகுறித்து உக்ரைன் இராணுவம் தரப்பில் கூறும்போது, "உக்ரைனின் கிழக்கு பகுதியான கார்கீவ் நகரில் ரஷ்யா தொடர்ச்சி யாக வான்வழித் தாக்குதலை நடத்தியது. இதில் குடியிருப்பு கட்டிடம் ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 15இற்கும் மேற்பட் டோர் பலியாகினர். இன்னும் பலர் கட்டிட இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். தொடர்ந்து அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது" என்றனர்.

இந்தத் தாக்குதலிலிருந்து தப்பித்த லுட்மிலா என்ற பெண் கூறும்போது, "முத லில் சமையலறையை நோக்கி தாக்குதல் நடத்தினார்கள். நாங்கள் அனைவரும் கட்டி டத்தின் அடி பகுதிக்கு வந்து விட்டோம்" என்றார்.

இந்தத் தாக்குதலை பயங் கரவாத தாக்குதல் என்று உக்ரைன் அரசு விமர்சித்துள்ளது. ஆனால், ரஷ்யாவோ குடிமக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்று விளக்கமளித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய முடிவு செய்ததால், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. மாதக் கணக்கில் இந்தப் போர் தொடர்ந்து நடக்கிறது. போர் காரணமாக இலட்சக்கணக்கான



மக்கள் போலந்து உள்ளிட்ட நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக உலகளவில் பெரும் பொருளாதார பின்னடைவும் ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2023இல் மக்கள் தொகையில் சீனாவை முந்தும் இந்தியா!

ஐ. நாவின் அறிக்கையின் படி, 2023 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா விஞ்சும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்தைய கணிப்புகளின்படி, உலக மக்கள் தொகை 2030 ஆம் ஆண்டில் சுமார் 8.5 பில்லியனாகவும், 2050 ஆம் ஆண்டில் 9.7 பில்லியனாகவும் வளரக்கூடும் என்று கணக்கிட்டுள்ளது.

மேலும், இது 2080களில் சுமார் 10.4 பில்லியன் மக்கள் தொகையை கொண்டிருக்கும் என்றும் 2100 வரை அந்த நிலையில் இருக்கும் என்றும் அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. அறிக்கையின் படிஇ 2023 ஆம் ஆண்டில் உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா விஞ்சும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2022 இல் தலா 1.4 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையுடன்இ சீனாவும் இந்தியாவும் இந்த பிராந்தியங்களில் மிகப்பெரிய மக்கள்தொகையைக் கொண்டுள்ளன.

அறிக்கையின்படிஇ சீனாவின் 1.426 பில்லியனுடன் ஒப்பிடுகையில்இ 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 1.412 பில்லியனாக உள்ளது. இது 2023 ஆம் ஆண்டில் இந்தியா சீனாவை மிஞ்சும் என்றும்இ 2050 ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகை 1.668 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அப்போது சீன மக்கள்தொகை 1.317 பில்லியனாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமேசன் காடழிப்பு உயர்வு!



பிரேசிலியா, ஜூலை 12

நியூயோர்க் நகரத்தின் (783.8 சதுர கி. மீற்றர் பரப்பை விட 5 மடங்கு அளவில் இந்த ஆண்டில் மட்டும் அமேசன் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிய வருகின்றது.

அமேசன் மழைக்காடு பல இலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் தென்னமெரிக்காவில் உள்ள பிரேசில், பெரு, ஈக்குவடோர் போன்ற 9 நாடுகளில் பரந்து விரிந்து இருக்கிறது.

இதன் பரப்பு மொத்த ஐரோப்பிய ஒன்றியத்தைவிட பெரியது. உலகில் எந்த இடத்தையும்விட அமேசனில் அதிக தாவரங்களும், விலங்குகளும் உள்ளன. ஆனால்இ கடந்த சில வருடங்களாக காடுகள் அழிப்பால் அமேசன் மழைக்காடுகள் அழிந்து வருகின்றன.

குறிப்பாக நடப்பு ஆண்டில் மட்டும் பிரேசிலின் அமேசன் மழைக்காடுகளில் நியூயோர்க் நகரத்தை விட 5 மடங்கு பெரிய பகுதி அழிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை 3 ஆயிரத்து 988 சதுர கிமீ அமேசன் காடுகள் பகுதி (1,540 சதுர மைல்கள்) அழிக்கப்பட்டன என்று தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இன்பே தெரிவித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய மழைக்காடுகளான அமேசனில் மரங்கள் அழிந்து வருவது வளிமண்டலத்தை மேலும் வெப்பமாக்குவதோடு மட்டுமின்றி காலநிலை மாற்றத்தை உண்டாக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் இலங்கை இனிங்ஸ் வெற்றி!

காலி, ஜூலை 12

தினேஷ் சந்திமாலின் இரட்டை சதம், பிரபாத் ஜெயசூரியவின் அபார பந்துவீச்சும் கைகொடுக்க அவுஸ்திரேலிய அணியை இனிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள அவுஸ்தி ரேலிய அணிக்கு எதிரான இரண் டாவது டெஸ்ட் போட்டி காலியில் நடக்கிறது.

முதல் இனிங்ஸில் அவுஸ்திரே லிய அணி 364 ஓட்டங்களை குவித் தது. இதில், ஸ்ரீவன் ஸ்மித் 104, ட்ராவிஸ் ஹெட் 145 ஓட்டங்களை அதிகபட்சமாக குவித்தனர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸி ல் துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி. நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது, இலங்கை அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 431 ஓட்டங்களை குவித்திருந்தது.



தினேஷ் சந்திமால் 118 ஓட்டங் களுடனும், ரமேஷ் மெண்டிஸ் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காமல் இருந்த நிலையில், நேற்று நான்காம் நாள் ஆட்டம் ஆரம்ப மானபோது, இருவரும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

இருவரும் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தினர். இந்த இருவரையும் பிரிக்க முடியாமல் ஆஸி. பந்துவீச்சாளர்கள் திண்டா டினர். அறிமுகப் போட்டியில் அபாரமாக ஆடிய மெண்டிஸ் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். 61 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அவர் ஆட்டமிழக்கவே, நிரோசன் திக்வெல்ல, 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில், இலங்கை அணி 500 ஓட்டங்களைப் பூர்த்தி செய் தது. தொடர்ந்து, ரமேஷ் மெண் டிஸ் 29, மஹீஸ் தீக்ஷன 10 என ஆட்டமிழந்தனர்.

இதனிடையே, தினேஷ் சந்தி மால் 200 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். இது அவரின் முதல் இரட்டை சதமாக அமைந்தது. பின்னர் வந்த, பிரபாத் ஜெயசூரிய 0, கசுன் ராஜித 0 என ஆட்டமிழக்க இலங்கை அணி முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 554 ஓட்டங்களைப் பெற்றது.

தினேஷ் சந்திமால் மட்டும் ஆட்டமிழக்காமல் 206 ஓட்டங் களைப் பெற்றிருந்தார்.

ஆஸியின் பந்துவீச்சில், ஸ்ரார்க் 4, மிற்செல் ஸ்வெப்சன் 3 விக்கெட் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு பிரபாத் ஜெயசூரிய பெரும் அச்சுறுத்தலாக மாறினார். இதனால், ஆஸி அணி 151 ஓட்டங்களுக்கு சகல விக்கெட் களையும் இழந்தது. தொடக்க வீரர்களான வோர் ணர் 24, கவாஜா 29, லபுசாக்னே 32 ஓட்டங்களைப் பெற்றனர். பின்னர் வந்தவர்களில் கிறீன் மட்டுமே அதிகபட்சமாக 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கை அணியின் பந்துவீச் சில் பிரபாத் ஜெயசூரிய 6 விக்கெட் களையும், மஹீஷ் தீக்ஷன, ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இரு போட்டிகள் கொண்ட தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியின் நாயகனாக பிரபாத் ஜெயசூரியவும், தொடரின் நாயகனாக தினேஷ் சந்திமாலும் தெரிவாகினர். (ஐ)



## தினேஷ் சந்திமால் இரட்டைச் சதம்!

காலி, ஜூலை 12

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தினேஷ் சந்திமால் இரட்டைச் சதம் அடித்தார். இது அவரின் டெஸ்ட் வரலாற்றில் முதல் இரட்டை சதமாகவும் அதிகூடிய ஓட்டமாகவும் அமைந்தது.

சந்திமால் தனது இரட்டை சதத்தை மிற்செல் ஸ்ரார்க்கின் பந்தில் விளாசிய இரண்டாவது சிக்ஸர் மூலம் சாதித்தார். இந்த இரட்டை சதம் மூலம் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அதிகூடிய ஓட்டத் தைப் பெற்ற வீரராகவும் சந்திமால் மாறினார். குமார் சங்கக்கார ஹோபார்ட்டில் பெற்ற 192 ஓட்டங்கள் பெற்றிருந்ததே இதுவரை காலமும் அவுஸ்திரேலி யாவுக்கு எதிராக இலங்கை வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்டமாக இருந்தது.

ஆஸி அணிக்கு எதிராக இறுதி 4 விக்கெட்கள் இழக்கப்பட்டபோது, இலங்கை வீரர்கள் 145 ஓட்டங் களை சேர்த்தார்கள். இது இலங்கையின் டெஸ்ட் துடுப்பாட்டத்தில், பின்வரிசை வீரர்கள் பெற்ற அதிக ஓட்டங்களாகவும் அமைந்தது. (ஐ)



## விம்பிள்டன் கிண்ணம் ஜொகோவிச் வசமானது

லண்டன், ஜூலை 12

விம்பிள்டன் கிண்ணத்தை வென்று, தனது 21ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டத்தைக் கைப்பற்றினார் ஜொகோவிச்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான இறுதிப்போட்டி, ஞாயிறுக்கிழமை நடந்தது.

இதில், முன்னணி வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச்சை அவுஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோஸின் எதிர்த்தாடினார்.

கடினமான போட்டியாக அமைந்த இந்தப் போட்டி யில் முதல் செற்றில் 4 - 6 என்ற கணக்கில் கிர்கோஸ் கைப்பற்றினார். எனினும், அடுத்த செற்களில் எழுச்சி கண்ட ஜொகோவிச் 6 - 3, 6 - 4, 7 (7) - 6(3) என்ற கணக் கில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம், 7ஆவது தடவையாக விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை ஜொகோவிச் கைப் பற்றியுள்ளார். அத்துடன், அவர் கைப்பற்றிய 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகவும் இது அமைந்தது. (ஐ)

## பதும் நிசங்கவுக்கு கோவிட் தொற்று!

கொழும்பு, ஜூலை 12

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் பதும் நிசங்க வுக்கு கோவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிக்கையில்,

பதும் நிசங்கவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, நேற்று காலை அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையின் போது அவருக்கு கோவிட் தொற்று கண்டறியப்பட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் பிற்பகலில் மேற் கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனை முடிவில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. கோவிட் தொற்றுக்குள்ளான பதும் நிசங்க உடனடியாக தனி மைப்படுத்தப்பட்டார்.

இதுவரை இலங்கையின் 6 வீரர்கள் கோவிட் தொற் றுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஜெப்ரி வெண்டர்சே, அசித்த பெர்னாண்டோ, தனஞ்சய டி சில்வா, பிரவீன் ஜெயவிக்ரம, ஏஞ்சலோ மொத்யூஸ் ஆகியோர் ஏற்கனவே கோவிட் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## ரி - 20 உலகக் கிண்ணம் இந்தியா வெல்ல வாய்ப்பு

### அப்ரிடியின் கணிப்பு இது

கராச்சி, ஜூலை 12

இந்திய அணி இருபது - 20 உலகக்கிண்ணத்தை வெல்ல வாய்ப்புள்ளதாக அப்ரிடி தெரிவித்துள்ளார்.

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்து மண்ணில் சுற்றுப்பயணம் செய்து இருபது - 20 தொடரில் விளையாடி வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது 20 ஓவர் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்த நிலையில் இந்தாண்டு நடைபெறவுள்ள 20 ஓவர் உலகக்கிண்ணம் தொடரை இந்திய அணி வெல்ல வாய்ப்புள்ளதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் சஹீட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது : இந்தியா சிறப்பான கிரிக்கெட்டை விளையாடி வருகிறது. இங்கிலாந்து தொடரை வெல்ல அவர்கள் தகுதியான வர்கள். அவர்கள் சிறப்பான பந்துவீச்சை கொண்டுள் ளனர். அவுஸ்திரேலியாவில் நடக்கும் இருபது - 20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெல்ல வாய்ப்புள்ளது - என்றார். (ஐ)

# பிரதமராவதற்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவை பெறவேண்டும் சுமந்திரன்



## விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை. 12
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்வாரா யின், அதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தினதும் ஏகோபித்த ஆதரவை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போதுள்ள சூழலில் ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமர் பதில் ஜனாதிபதியாக செயற்படுவார்.

அவரால் அது முடியாது போனால், சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார்.

ஆகவே ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் இந்த மூன்று பேருக்கு மட்டுமே உள்ளது.

புதிய முகங்கள் என்பதற்காக நாங்கள் சர்வகட்சி அரசாங்கம் அமைக்க போகின்றோம் என மக்கள் முன் வந்தால் அதனால் எந்த பயனும் கிடையாது.

எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கம் அமைப்பது என்பதை விட எங்களிடம் என்ன கொள்கைகள் என்ன மாதிரியான விடயங்களை முன் வைத்து நாம் அரசாங்கத்தை அமைக்க போகின்றோம் என்பதே முக்கியம்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உத்தியோகபூர்வமல்லாத வகையில் சுமந்திரனை பிரதமராக நியமிக்கலாம் என்று அணுகிய நிலையில், அதை எல்லாக் கட்சிகளும் இணைந்து அழைத்தால் தான் அந்தப் பதவியை ஏற்க முடியும் என சுமந்திரன் தெரிவித்துள்ளார் என எனக்கு அறியக் கிடைத்தது.

சுமந்திரனை பிரதமராக அழைப்பது என்றால் உண்மையிலேயே நான் சந்தோஷம் அடைவேன்.

ஆனால், சில விடயங்களை மனதில் வைத்திருக்க வேண்டும்.

அவர் தன்னுடைய கட்சியின் ஏகோபித்த விருப்பிலா அல்லது தன்னுடைய தனிப்பட்ட விருப்பிலா இந்தப் பதவியை ஏற்றுக் கொள்வார் எனும் கேள்வியும் எழுகின்றது.

அத்தோடு, தமிழர்கள் அமைச்சுப் பதவியை ஏற்றதன் பிற்பாடு தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தால், தாங்கள் என்ன காரணத்துக்காக பாராளுமன்றுக்கு கொண்டுவரப்பட்டார்கள் என்பதை மறக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எந்த நேரமும் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து வேலையைச் செய்யும்போது மத்திய அரசாங்கத்தினுடைய விருப்பு, இநத விடயங்களில் தாக்கம் செலுத்துவதால் தமிழ் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப் படுவர் என்பதை மறந்து விடக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஏற்றதன் பின்னர் அமிர்த லிங்கத்தின் வாழ்வில் பல முரண்பாடுகள் ஏற்பட்டன. சம்பந்தனும் அது போலவே செயற்பட்டார்.

சுமந்திரன் இவ்வாறு பதவி ஏற்றுக்கொள்வதானால் தமிழ் கட்சிகள் அனைத்தினதும் ஏகோபித்த விருப்பை பெற்றுக் கொண்டால் நல்லது என நினைக்கின்றேன் - என்றார். (அ)

# சகல தனியார் பஸ் சேவைகளும் இன்று முதல் முடங்கும் அபாயம்

வடமராட்சி, ஜூலை 12
தனியார் பஸ் சேவை இன்று முதல் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த நான்கு நாட்களாக பருத்தித்துறை சாலையிலிருந்து தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு டீசல் வழங்கப்படாமையால் வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கம் நேற்றிலிருந்து பஸ் சேவைகளை குறைத்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து 15 நிமிடத்திற்கு ஒரு தடவை இடம் பெற்று வந்த 750 வழித்தடமான யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பஸ் நேற்று 30 நிமிடத்திற்கு ஒரு சேவையாக குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் பயணிகள் மற்றும் பஸ் உரிமையாளர்கள், நடத்துநர்கள், சாரதிகள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை சாலைக்கு நேற்று தாங்கி மூலம் டீசல் கொண்டு வரப்பட்டு நிரப்பப்பட்டது.

டீசல் வழங்க வேண்டாமென மேலிடத்திலிருந்து வந்த உத்தரவுக்கு அமையவே தங்களால் தனியார் போக்குவரத்து சேவைக்கு டீசல் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பருத்தித்துறை சாலை தகவல்கள் தெரிவித்தன. (அ-02)

# பொது போக்குவரத்தில் தொடர்ந்தும் சிக்கல்!

கொழும்பு, ஜூலை. 12
எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் நேற்றும் முறையான பஸ் போக்குவரத்து முன்னெடுக்கப்படவில்லை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று 500 பஸ்களை மாத்திரமே போக்குவரத்தில் ஈடுபட்டதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சாலைகளின் ஊடாக தமக்கான எரிபொருள் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இதனிடையே, எரிபொருள் நெருக்கடி காரணமாக மாகாணங்களுக்கிடையிலான பஸ் போக்குவரத்து மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(அ)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

மன்னார், ஜூலை. 12
மன்னார் பிரதேசத்தில் சுமார் 03 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் - சாவற்காடு பகுதியைச் சேர்ந்த 35 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரொன்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப்பொருளை மறைத்து வைத்து பயணிக்கும் போது குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 04 கிலோ 329 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# சபாநாயகரை சந்திக்கும் போராட்டக்காரர்கள்!

கொழும்பு, ஜூலை 12
பாராளுமன்றத்துக்கு கட்சி சார்பற்ற செயற்பாட்டாளர்கள் இன்று செல்லவுள்ளதாகவும் சபா நாயகரை சந்திக்கவுள்ளதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை பெரும் போராட்டத்தை முன்னெடுத்த போராட்டக்காரர்களான கட்சி சார்பற்ற செயற்பாட்டாளர்களே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுடன் இன்று சிறப்பு கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கட்சி சார்பற்ற செயற்பாட்டாளர்கள் 25 பேர் பங்கேற்கவுள்ளதாக மேலும் கூறப்பட்டுள்ளது. (அ)

# இடைக்கால ஜனாதிபதிப் பதவிக்காக சட்டத்தரணி சாலிய பீரிஸ் பரிந்துரைப்பு

கொழும்பு, ஜூலை. 12
இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸை தேசிய பட்டியலில் பாராளுமன்றத்திற்கு நியமித்து, இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மாகாண ஆளுநர்களான மைத்திரி குணரட்ன, கீர்த்தி தென்னக்கோன் மற்றும் அசாத் சாலி ஆகியோர் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

அனைத்து தரப்பினரும் இணங்கக்கூடிய மற்றும் சுயாதீனமாக செயற்படக்கூடிய சாலிய பீரிஸை இடைக்கால அரசாங்கத்தின் ஜனாதிபதியாக நியமிப்பது பொறுத்தமானது என நாட்டின் அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும், பொதுமக்களும் பரிந்துரைக்கின்றனர்.

அதேபோல் அரச அடக்குமுறை உக்கிரமடைந்து, நாடு ஆபத்தான நிலைமைக்குள் செல்லவிருந்த சந்தர்ப்பத்தில் அதனை தடுக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்,சட்டத்தரணிகள் பாரிய பங்களிப்புகளை செய்தனர்.

மக்கள் போராட்டத்தின் பாதுகாவலர்களாகவும் அனுரசணையாளர்களாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் செயற்பட்டது.

இதனால், ஜனாதிபதியாக சாலிய பீரிஸை நியமிப்பது, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெறக்கூடிய நபர், கட்சியை சேர்ந்த ஒருவரை பிரதமராக தெரிவு செய்ய முடியும்.

அப்போது உண்மையான சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கி, போராட்டகாரர்கள் இணங்கக்கூடிய பொது இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் முன்னாள் ஆளுநர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளனர். (அ)

## சர்வகட்சி...

செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார முன்வைத்தார்.

அவரின் இந்தக் கருத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து பிரதமர் பதவி டலஸுக்கு வழங்குவதற்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதேசமயம் டலஸ் அழகப்பெருமவுக்கு ஜனாதிபதி பதவியும், சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவியும் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை சுயாதீனமாக செயல்படும் கட்சிகளின் தலைவர்கள் முன்வைத்தனர்.

ஆனால், ரஞ்சித் மத்துமபண்டார ஜனாதிபதி பதவி சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டும் என்றும் கேட்டார்.

இது தொடர்பில் இணக்கம் எட்டப்படாத அதேசமயம், சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வரக்கூடாது என்றும் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்காது என்றும் சுமந்திரன் எம். பி. தெரிவித்தார். இதேநேரம், பொது நபர் ஒருவருக்கு 13 தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம், ஜே. வி. பி. கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, பொது நபர்கள் பிரதமர், ஜனாதிபதி பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும். அவர்கள் அடுத்த தேர்தலில் இந்தப் பதவிகளுக்காகப் போட்டியிடக்கூடாது என்று கூறினார்.

இதேசமயம், ஜனாதிபதி - பிரதமர் பதவிகளுக்கு இரண்டாம் கட்டத் தலைவர்களை பதவியில் அமர்த்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஆதரவு தெரிவித்தனர். இதன்போது, தேசிய பேரவையை நிறுவுவதற்கும், அதில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் அங்கத்துவம் பெறச் செய்யவும் முடிவு எட்டப்பட்டது. இந்த தேசிய பேரவையை ஜனாதிபதி, பிரதமருக்கு ஆலோசனைகளை வழங்கி அரசாங்கத்தையும் வழிநடத்தும் என்று முடிவு எட்டப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

பாராளுமன்றத்தில் நேற்றுக்கூடிய சர்வகட்சி தலைவர்கள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பிலும், இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவுவது குறித்தும் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், எதிர்வரும் 15ஆம் திகதியே பாராளுமன்றத்தை கூட்டுவது என்றும், அன்றைய தினம் அரசமைப்பு விதிகளின் படி புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான செயல்முறைகள் ஆரம்பமாகும்.

இதைத்தொடர்ந்து நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும். நியமனப் பத்திரங்கள் தாக்கலாகி 5 நாட்களில் (20ஆம் திகதி) ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதனிடையே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகுவார். இதனால், அரசமைப்பு விதிகளின் படி பிரதமர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்பார். அவரின் பதவிக்காலம் புதிய ஜனாதிபதி தெரிவாகி - பொறுப்பேற்கும் வரை செல்லுபடியாகும்.

ஆனால், தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி பதவிக்காகப் போட்டியிடுவார். அவருக்கு பொதுஜன பெரமுன கட்சியினர் ஆதரவளிப்பர் என்றும், இது தொடர்பில் அந்தக் கட்சியின் உயர்வட்டாரங்கள் கூடி தீர்மானித்துள்ளன என்றும் அறிய வருகின்றது.

இதனிடையே, ரணில் விக்கிரமசிங்கவுக்கு 115 எம். பிக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர் இதன்மூலம் அவர் பெரும்பான்மையை பெற்றுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. ஜனாதிபதி பதவிக்காக இருவர் அல்லது பலர் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெறுபவருக்கே பதவி கிட்டும். அறுதிப் பெரும்பான்மை இங்கு அவசியமல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாட்டை...

கட்டியெழுப்ப நான்கு ஆண்டுகள் தேவை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதாகவும் இதில் முதலாவது வருடமே கடுமையான காலம் என்று அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் ஊடகப்பிரிவு வெளியிட்ட காணொளியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை கூறியுள்ளார்.

இதேவேளை, தமக்கென உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்த ஒரே வீடு இன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதில் அதிகமாக அழிந்துபோன சொத்துக்கள் தனது நூல்களாகும் என்று ரணில் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேயர் காலம் மற்றும் ஒல்லாந்து கால நூல்கள் உட்பட்ட 2500 நூல்கள் அதில் இருந்தன.

தமது காலத்தின் பின்னர் இந்த நூல்களை நாட்டின் பல இடங்களிலும் அன்பளிப்பாக வழங்குவதற்கு தாம் தீர்மானித்திருந்ததாக ரணில் தெரிவித்துள்ளார்.

அதனை விட பழங்காலத்து சித்திரங்களும் இருந்தன. எனினும் தற்போது ஒரேயொரு சித்திரமே தம்மிடம் எஞ்சியுள்ளதாக ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

இதற்கிடையில் கட்சி தலைவர்களின் கூட்டத்தின்போது, சர்வக்கட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமானால், தாம் பிரதமர் பதவியில் இருந்து விலகிக்கொள்ளத் தயார் என்பதை அறிவித்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க காணொளியில் தெரிவித்துள்ளார். (அ)

## முப்படை...

னார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர். முன்னதாகவே, அங்கிருந்து வெளியேறியிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போராட்டம் ஆக்ரோஷமானதைத் தொடர்ந்து கடற்பரப்பில் நின்றிருந்த கடற்படையின் கப்பல் ஒன்றில் சென்று தங்கியிருந்தார் என்று அறிய வருகின்றது.

அந்தக் கப்பலிலிருந்து நேற்றுக் காலை நாட்டுக்குள் வந்த அவர், முப்படைகளின் தளபதிகளை சந்தித்து பேசினார். நாளை பதவி விலகும் அவர் ஒரு சில நாட்களிலேயே நாட்டை விட்டு வெளிநாடு ஒன்றுக்கு செல்கிறார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## அம்புலன்ஸ்...

மாகவே இந்த அம்புலன்ஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, முல்லைத்தீவு, வவுனியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை, புத்தளம், பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலேயே இந்த அம்புலன்ஸ் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த மாவட்டங்களில் 1990இற்கு அழைப்பதைத் தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## 13 ஆம் திகதியே...

ஜனாதிபதி கோட்டாபய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னர் அறிவித்தபடி பதவி விலகுவதாக பிரதமரிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதியின் தகவல்களை சபாநாயகரே வெளியிடுவார்!

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிடும் அனைத்து செய்திகளும் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் சபாநாயகரால் வெளியிடப்படும். எனவே, சபாநாயகர் வெளியிடும் அறிவிப்புகளை மாத்திரம் ஜனாதிபதி வெளியிடும் அதிகாரபூர்வ அறிவிப்புகளாகக் கருத வேண்டும் என்று ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னர் குறிப்பிட்டதைப் போன்று பதவி விலகுவார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது.

இதைத் தொடர்ந்தே ஜனாதிபதி செயலகத்தினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிவாயு ரூ. 50 உயர்வு!

கொழும்பு, ஜூலை 12

லிட்ரோ எரிவாயு நிறுவனம் 12.5 கிலோ கிராம் வீட்டு எரிவாயு சிலிண்டரின் விலையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 50 ரூபாயால் அதிகரித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ எடை கொண்ட சிலிண்டர் ரூ.4,910ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பில் நேற்று எரிவாயு விநியோகம் இடம்பெற்ற நிலையில், அதன் புறநகர் பகுதிகளில் இன்றைய தினம் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும், நாளை முதல் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எரிவாயு விநியோகிக்கப்படும் எனவும் லிட்ரோ தெரிவித்துள்ளது. (ஐ)

# வெதுப்பக உற்பத்தியாளருக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாண மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் மற்றும் பிரதிநிதிகள் மாவட்ட அரச அதிபரிடம் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

எனவே வெதுப்பக உற்பத்தியாளர்கள், வெதுப்பக சங்கம் ஊடாக தொடர்பு கொண்டு உற்பத்தி மற்றும் விற்பனையை தடையின்றி மேற்கொள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பொருளாதார முன்னேற்றத்தை அரசியல் ஸ்திரமின்மை தாக்கும்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 12

அரசியல் ஸ்திரமின்மை காரணமாக இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் தாமதமாகலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்திரமான அரசியல் நிர்வாகத்தின் தேவை, சிறந்த முன்னேற்றத்தை ஏற்படுத்த சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவது மற்றும் நிதி மற் றும் எரிபொருள் பற்றாக்குறையை தீர்க்க வேண்டியது அவசியம் என மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிடுகிறார்.

இதேவேளை, இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பரிமாற்றம் செய்வதற்கும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதியை...

பாராளுமன்றைக் கூட்டி ஜனாதிபதி பதவிக்கான வெற்றிடம் இருப்பதாக சபைக்கு தெரிவிக்கப்படும். ஜனாதிபதி பதவிக் கான வேட்பு மனுக்கள் 19ஆம் திகதி கோரப்படும். புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு 20ஆம் திகதி நடத்தப்படும்.

புதிய ஜனாதிபதியின் கீழ் அனைத்துக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கும் அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்தும் வழங்கவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கோட்டாபய...

களிலேயே, ஜனாதிபதி நாட்டிலேயே தங்கியிருக் கிறார் என்று மாற்றிக் கூறியுள்ளார்.

சிங்களச்செய்திச் சேவை ஒன்றுக்குக் கருத்து வெளி யிட்ட சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, தான் பி. பி. சி செய்திக்கு அவ் வாறு கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடன் தொடர்பில் இருக்கிறார் என்றும் கூறியுள்ளார். (ஐ)

## அடுத்த...

பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் கொண்டுவரப்பட்டதுடன், பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவும் அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு கூட்டம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், திகாம்பரம், மனோ கணேசன் உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றதாக கொழும்பு செய்திகள் மேலும் கூறின. (அ)

## 13ஆம் திகதி...

முடியாது. இதனால், அன்றைய தினம் பதில் ஜ னாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்காலிகமாகப் பதவியேற்பார்.

இதைத் தொடர்ந்து 15ஆம் திகதி பாராளுமன்றம் கூடி ஆராய்ந்து அதற்கும் பின்னரே (20ஆம் திகதி) புதிய ஜனாதிபதியை தெரிவு இடம்பெறும். அதுவரை ரணில் விக்கிரமசிங்கவே பதவியில் நீடிப்பார்.

இந்த விடயம் தொடர்பில் மகிந்த, பஸில், நாமல் உள்ளிட்டவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ஐ- சி)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



# வீடு தீக்கிரையானதற்கு ரவூப் ஹக்கீமே காரணம்!

## ரணில் விக்கிரமசிங்க சாடல்

கொழும்பு, ஜூலை 12

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினாலேயே எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'நீங்கள் பதிவிட்ட ருவிட்டரே எனது வீடு தீக்கிரையாகக் காரணம்' என்று நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ரவூப் ஹக்கீமை கடுமையாகச் சாடினார்.

இதனையடுத்து கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் பெரும் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

இதேவேளை, நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆற்றிய உரையின் போதும் இதனை குறிப்பிட்டிருந்தார். (ஐ)

# எல்லை தாண்டி மீன்பிடி; 6 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 12

எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 6 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும் அதிலிருந்த 6 இந்திய மீனவர்களையும் தாம் கைது செய்தனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)







# போராட்டக்காரர்களுக்கும் அரசில் பங்கு வேண்டும்!

## இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என்கின்றார் லஹிரு வீரசேகர



**கொழும்பு, ஜூலை. 12**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதற்காக ஜூலை 9 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டு விட்டது என காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் சார்பில் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.**

பதவி விலகுவதற்கான காலம் வழங்கப்பட்ட நிலையில், பதவியில் இருந்து விலகுவதற்கு ஏன் 13 ஆம் திகதி வரை காத்திருக்கவேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வக்கட்சி அரசாங்கம் தேவையில்லை-வேறு ஒருவரை நாற்காலியில் அமர வைத்து வேடிக்கை பார்க்க போராடவில்லை.

சர்வகட்சி அரசாங்கம் எதுவும் தேவையில்லை என்பதை ஏனைய அரசியல்வாதிகளுக்கு கூறி வைக்கவிரும்புகிறோம். மற்றுமொருவரை நாற்காலியில் அமர வைத்து வேடிக்கை பார்ப்பதற்காக போராட்டத்தை நடத்தவில்லை.

அடுத்து ஆட்சிக்கு வரும் எந்த ஆட்சியாளராக இருந்தாலும் அரசாங்கமாக இருந்தாலும் மக்கள் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அங்கம் வகிக்காத அரசாங்கமாக இருந்தால், போராட்ட அலை மூலம் பதில் வழங்க தயாராக உள்ளோம்-என்றார். (அ)

# பெற்றோல் வரிசையில் நின்றவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்!

வவுனியா, ஜூலை. 12

வவுனியாவில் பெற்றோல் வரிசையில் நின்று விட்டு இளைப்பாறுவதற்காகச் சென்றவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, பண்டாரவன்னியன் சதுக்கம் பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 5 தினங்களாக பெற்றோல் வழங்கப்படாத நிலையில் மோட்டர் சைக்கிளை அரச உத்தியோகத்தர்களுக்கான வரிசையில் நிறுத்தி விட்டு குடும்பஸ்தர் ஒருவர் எரிபொருளுக்காக காவல் நின்றுள்ளார்.

நேற்றும் பெற்றோல் கிடைக்காமையால் நீண்ட நேரம் வரிசையில் நின்றுவிட்டு இளைப்பாறுவதற்காக நகரசபை முன்பாக உள்ள கடைப் பகுதிக்கு சென்றபோது குறித்த குடும்பஸ்தர் மயங்கி விழுந்துள் ளார்.

இதனையடுத்து, அவரை அருகில் நின்ற மோட்டர் சைக்கிளில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும், அவர் வைத்தியசாலைக்கு கொண்டு வருவதற்கு முன்னரே இறந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மரணமடைந்தவர் வவுனியா நகரசபையில் சுகாதார ஊழியராக கடமையாற்றும் வவுனியா, கொக்குவெளி பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வகுமார் (வயது 44) என்பவராவார். (அ)

# பதவி விலகல் கடிதத்தை இன்று சமர்ப்பிக்கவுள்ளார் கோட்டாபய



கொழும்பு, ஜூலை. 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதத்தை இன்று செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொள்ளவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கான எழுத்தபூர்வ கோரிக்கையை இதுவரை தன்னிடம் சமர்ப்பிக்கவில்லை என்று சபாநாயகர் கூறினார். (அ)

# 15ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகிறது புதிய ஜனாதிபதித் தேர்வு 20 ஆம் திகதி!

கொழும்பு, ஜூலை. 12

எதிர்வரும் 15 ஆம் திகதி பாராளுமன்றம் ஒன்றுகூடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி பதவி விலகியதாக பாராளுமன்றத்தில் அறிவித்ததை அடுத்து 20 ஆம் திகதி பாராளுமன்ற வாக்கெடுப்பின் ஊடாக புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று பிற்பகல் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

புதிய ஜனாதிபதிக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் யாழ் பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கத்தி சண்டை, ஜித்தன்-02
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு